இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 27 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 19 – செவ்வாய்க்கிழமை 05 செப்டம்பர் 2023 – வெளியூர் 12 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 27: Thiruvalluvar Year - 2054 - Aavani 19 - Tuesday 05 September 2023 - Dak 12+8 Pages ₹5.00

# வஞ்சிக்கும் பா.ஜ.க.வை வீழ்த்துவோம்; இந்தியாவை மீட்டெடுப்போம்!

## “Speaking for India” பாட்காஸ்ட் தொடரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முழக்கம்!




திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘வஞ்சிக்கும் பா.ஜ.க.வை வீழ்த்துவோம்; இந்தியாவை மீட்டெடுப்போம்!’ என்ற தலைப்பில் தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் நேற்று (04.09.2023) வெளியிட்டுள்ள Speaking for India பாட்காஸ்ட் சீரிசின் முதல் அத்தியாயம் வருமாறு:–

தமிழ்நாட்டின் முதலமைச்சராக - இந்திய நாடாளுமன்றத்தின் மூன்றாவது பெரிய கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கும், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், உங்களில் ஒருவனாக, இந்தியாவிற்காகப் பேசப் போவதுதான் இந்த ‘பாட்காஸ்ட் சீரிசின்’ நோக்கம்.

இந்தியாவிற்காக எல்லோரும் பேசியாக வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். காலம் காலமாக, இந்திய மக்கள் அனைவரும் போற்றிப் பாதுகாத்து வந்த ஒற்றுமை உணர்வு என்ற தத்துவத்தை சிதைத்து, இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பையே சிதைக்க பாரதீய ஜனதா கட்சி முயற்சி செய்கிறது.

2014ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பாரதீய ஜனதா கட்சி - தேர்தலுக்கு முன்னால் கொடுத்த எந்த மக்கள் நல வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை.

★ **வெளிநாட்டில் இருந்து கருப்புப் பணத்தை மீட்டு வந்து ஆளுக்கு 15 லட்சம் ரூபாய் தருவோம்.**

★ **ஆண்டுதோறும் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு.**

★ **உழவர்களின் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்குவோம்.**

★ **சொந்த வீடு இல்லாதவர்களே இருக்க மாட்டார்கள்.**

★ **இந்தியா 5 டிரில்லியன் டாலர் பொருளாதார நாடாக மாறும்.**

இப்படி எல்லாம் வாயால் வடை சுட்டார்கள். பத்து ஆண்டு ஆகப் போகிறது. ஆனால் எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. ‘குஜராத் மாடல்’ என்று பொய் சொல்லி ஆட்சிக்கு வந்த நரேந்திர மோடி மாடல் - இப்போது என்ன ‘மாடல்’ என்றே தெரியாமல் முடியப் போகிறது!

திராவிட மாடல் என்னென்ன சாதனைகளைத் தமிழ்நாட்டில் செய்திருக்கிறார்கள் என்று நாம் புள்ளிவிவரத்தோடு அடுக்கிய பிறகு, அவர்கள் பெருமையாகப் பேசிவந்த ‘குஜராத் மாடல்’ பற்றி, இப்போது மறந்தும் கூட பேசுவதில்லை.

இது ஒரு பக்கம் என்றால் - இன்னொரு பக்கம், நன்றாக இருந்த இந்தியாவின் பொதுத்துறை கட்டமைப்பையும் சீரழித்து, சின்னாபின்னமாக்கி விட்டார்கள். தங்களுக்கு நெருக்கமான தொழிலதிபர்களுக்கு அதை மடைமாற்றும் செயலை மட்டுமே செய்துகொண்டு இருக்கிறார்கள். ஒட்டுமொத்த இந்திய மக்களின் நலன் என்பது - சிலரின் நலனாக சுருங்கிவிட்டது. அரசுக்குச் சொந்தமான ‘ஏர் இந்தியா’ நிறுவனம், இப்போது தனியாருக்கு விற்கப்பட்டுவிட்டது.

இந்தியா முழுவதும் இருக்கும் விமான நிலையங்களும், துறைமுகங்களும் தனியார் கைக்குப் போகிறது. பிரதமர் மோடி சொன்னதுபோல், உழவர்களின் வருமானமும் இரண்டு மடங்கு ஆகவில்லை; ஏழை பாழைகளின் வாழ்க்கைத்தரமும் உயரவில்லை. இதை எல்லாம் மறைப்பதற்காகத்தான் மதவாதத்தைக் கையில் எடுத்திருக்கிறார்கள். மக்களின் மத உணர்வுகளைத் தூண்டி, அதில் குளிர்காயப் பார்க்கிறார்கள்.

2002-ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் பா.ஜ.க. விதைத்த வன்முறை, வெறுப்பு விதையானது, 2023-ஆம் ஆண்டு வடகிழக்கு மாநிலமான மணிப்பூரைப் பற்றி எரிய வைத்திருக்கிறது. ஹரியானாவில் மூட்டிவிடப்பட்ட மதவெறித் தீ, இன்றைக்கு அப்பாவி மக்களின் உயிரையும் சொத்துகளையும் காவு வாங்குகிறது. இதற்கு இப்போது முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்றால், இந்தியாவை யாராலும் காப்பாற்ற முடியாது.

**இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு - கூட்டாட்சித் தத்துவத்திற்கு - மக்களாட்சி மாண்புக்கு எப்போதெல்லாம் ஆபத்து வந்திருக்கிறதோ, அப்போதெல்லாம் முன்னணிப் படையாக தி.மு.க. நின்றிருக்கிறது. இதைத்தான் “You should take the DMK as the spearhead of the opposition to the unitary nature...” என்று பேரறிஞர் அண்ணா மாநிலங்களவையில் முழங்கி இருக்கிறார்.**

**“தமிழ்நாட்டில் கால் பதித்து நின்று இந்தியாவிற்காகப் பேசும் கட்சியாக நமது இயக்கம் இயங்க வேண்டும்” என்று சொன்னதோடு மட்டுமில்லாமல், ஆட்சி மாற்றங்களையே உருவாக்கிக் காட்டி இருக்கிறார் தமிழினத் தலைவர் கலைஞர். பிரதமர்களை - குடியரசுத் தலைவர்களை உருவாக்கிய இயக்கம் தி.மு.க. இப்போது மீண்டும் ஒரு வரலாற்றுக் கடமை நம்மை நோக்கி வந்துகொண்டு இருக்கிறது.**

**2024 தேர்தல் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை விட - யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்று தீர்மானிக்க வேண்டிய தேர்தல். 9 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில், மாநிலங்களை அழிக்கின்ற படுபாதகமான பல மோசடிகள் செய்யப்பட்டிருக்கிறது.**

## இது M.K.STALIN குரலாக மட்டுமல்ல; இந்தியாவின் குரலாக அமையும்!

மாநிலங்களின் நிதி உரிமையை முழுவதுமாக பறித்துவிட்டது ஜி.எஸ்.டி. இதனால், தமிழ்நாட்டிற்கு நிதி சுயாட்சி உரிமை பறிபோனதுதான் மிச்சம்.

ஜி.எஸ்.டி இழப்பீட்டை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று மாநிலங்கள் பலமுறை கோரிக்கை விடுத்தும் ஒன்றிய அரசு அதை ஏற்கவில்லை.

ஒன்றிய அரசுக்கு வரியாக, தமிழ்நாடு ஏராளமான நிதியை ஆண்டுதோறும் தருகிறது. அதே நேரத்தில், தமிழ்நாடு ஒன்றிய அரசிற்கு வரி வருவாயாக செலுத்துகிற ஒவ்வொரு ரூபாய்க்கும் ஈடாக, 29 பைசா மட்டுமே திரும்பக் கிடைக்கிறது.



2014 முதல் கடந்த ஆண்டு வரை நம் மாநிலம் ஒன்றிய அரசுக்கு கொடுத்த வரி 5 லட்சத்து 16 ஆயிரம் கோடி ரூபாய். ஆனால், வரிப் பகிர்வாக, நமக்குத் திரும்ப கிடைத்தது என்னவோ, வெறும் 2 லட்சத்து 8 ஆயிரம் கோடி ரூபாய்தான்.

**பெற்றதை முழுவதுமாகத் தர முடியாது என்று சொன்னால் - பா.ஜ.க. ஆளுகிற மாநிலத்திற்கு மட்டும் எப்படி கொடுக்க முடிகிறது? பா.ஜ.க. ஆளும் ஒரு மாநிலம் 2 லட்சத்து 24 ஆயிரம் கோடி ரூபாய்தான் வரியாகக் கொடுத்திருக்கிறது. ஆனால் வரிப் பகிர்வாக, 9 லட்சத்து 4 ஆயிரம் கோடி ரூபாய் பெற்றிருக்கிறது. இதைத்தான் ஓரவஞ்சனை என்று சொல்கிறோம். இவ்வாறு எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கும் ஆட்சியாக ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி இருக்கிறது.**

ஒன்றிய நிதிக்குழு ஒதுக்கீட்டில் தமிழ்நாடு தொடர்ந்து பெரும் நிதி இழப்பைச் சந்தித்து வருகிறது. 12ஆவது நிதிக்குழுவில் 5.305 விழுக்காடாக இருந்த நிதி ஒதுக்கிடு, 15ஆவது நிதிக் குழுவில் 4.079 விழுக்காடாக குறைந்திருக்கிறது.

இதனால், ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு இழக்கின்ற நிதி கொஞ்சம் நஞ்சமல்ல. நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய 72,311 கோடி ரூபாயை நாம் இழந்திருக்கிறோம்.

பல திட்டங்களுக்கான பெரும் பங்கு மாநில அரசால்தான் வழங்கப்படுகிறது. ஆனால் அதற்கான பெயர் மட்டும் ஒன்றிய அரசுக்கு வேண்டும் என்று நினைக்கிறார்கள். தமிழ்நாட்டிற்கு முத்திரைத் திட்டங்கள் என்று ஒன்று கூட இந்த 9 வருடங்களில் தரவில்லை. மாநிலங்களைப் பழிவாங்குகிற அரசாக இப்போதைய ஒன்றிய பா.ஜ.க. அரசு இருக்கிறது.

மக்களுக்கு நேரடியாக நன்மை செய்ய வேண்டிய பொறுப்பில் இருக்கிற மாநில அரசுகளை சிதைப்பதையே நோக்கமாக வைத்திருக்கிறார்கள். இது மூலமாக ஒட்டுமொத்த இந்தியாவையும் சிதைக்கப் பார்க்கிறார்கள்.

Social justice, Secular politics, Socialism, Equity, Social harmony, State autonomy, Federalism, Unity in diversity இவை உயிர்வாழும் இந்தியாதான் உண்மையான இந்தியா! இணையற்ற இந்தியா! அப்படிப்பட்ட இந்தியாவை மீட்டெடுக்கத்தான் இந்தியா கூட்டணியை உருவாக்கியிருக்கிறோம். இந்தியாவைக் காப்பாற்றப் போவது இந்த INDIA கூட்டணிதான்.

பா.ஜ.க.வின் வகுப்புவாத - வெறுப்பு அரசியலுக்கு மணிப்பூரும் ஹரியானாவும் பலியானதைப்போல மொத்த இந்தியாவும் பலியாகிவிடாமல் தடுக்க வேண்டும் என்றால், INDIA கூட்டணி வெல்ல வேண்டும்.

இதற்கான ஆரம்பகட்ட ஆலோசனைக் கூட்டங்கள் பாட்னாவிலும், பெங்களூரிலும், மும்பையிலும் நடந்துள்ளன. பன்முகத்தன்மை கொண்ட பண்பட்ட இந்தியாவைச் செதுக்குவோம்! இந்தியாவைக் காப்போம். அதற்காக முதலில் இந்தியாவுக்காகப் பேசுவோம்!

**இனி இது M.K.STALIN குரலாக மட்டுமல்ல, இந்தியாவின் குரலாக அமையும். எனது குரலை இந்தியாவின் குரலாக எல்லோரிடத்திலும் எடுத்துச் செல்லுங்கள்! வெல்க இந்தியா!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

Social justice, Secular politics, Socialism, Equity, Social harmony, State autonomy, Federalism, Unity in diversity **இவை உயிர்வாழும் இந்தியாதான் உண்மையான இந்தியா! இணையற்ற இந்தியா! அப்படிப்பட்ட இந்தியாவை மீட்டெடுக்கத்தான் இந்தியா கூட்டணியை உருவாக்கியிருக்கிறோம். இந்தியாவைக் காப்பாற்றப் போவது இந்த** INDIA **கூட்டணிதான்.**



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 05-09-2023

# சனாதனமும் சனாதனிகளும்

சனாதனம் - என்பது என்ன? வேறுபாடும் - பாகுபாடும் காட்டுவதுதான் சனாதனம். உயர்ந்த ஜாதி - தாழ்ந்த ஜாதி என்ற பேதத்தை உருவாக்குவது சனாதனம். ஜாதியில் மட்டுமல்ல ஆண் உயர்ந்தவன் - பெண் தாழ்ந்தவள் என்ற பேதத்தை உருவாக்குவதுதான் சனாதனம்.

சனாதனிகள் - என்பவர்கள் யார்? இந்த பாகுபாட்டையும் வேற்றுமையையும் காப்பாற்றுபவர்கள். அவர்களது மொழியில் தாழ்ந்தவர்களாக அடையாளம் காட்டப்படுபவர்களையும் - பெண்களையும் முன்னேறவிடாமல் தடுப்பவர்கள்தான் சனாதனிகள். ஒட்டுமொத்த இந்துப் பெண்களையும், பெரும்பான்மை இந்து ஆண்களையும் இழிவுபடுத்தும் கொள்கைதான் சனாதனம். மனுஸ்மிருதியின் ஒவ்வொரு சூத்திரமும் இதனைத்தான் சொல்கிறது.

**இத்தகைய சனாதனத்துக்கும் - சனாதனிகளுக்கும் எதிரான போராட்டம் தமிழ்ச் சமூகத்தில் பல்லாண்டுகளாக நடந்து வருகிறது. அதில் முதலாமவர் வான்புகழ் வள்ளுவர். அடுத்து வருகிறார் அருட்பிரகாச வள்ளலார். இதனை அரசியல் இயக்கமாக ஆக்கியவர் தந்தை பெரியார். இதுதான் இன்றுவரை ஒலித்துக் கொண்டு இருக்கிறது.**

சங்க காலத்திலேயே துளிர் விட்டு - நிலப்பிரபுத்துவ காலத்தில் வேர் பதித்து - அன்னியப் படையெடுப்புகளால் ஆதிக்க சக்தியாகவே மாறி - காலனியக் காலத்திலும் அவர்களுக்கு அடிமைச் சேவகம் செய்தும் அச்சுறுத்தியும் பணிய வைத்து - விடுதலை பெற்ற இந்தியாவிலும் அந்தச் சிந்தனைகளை முழுக்க முழுக்க விதைத்து சனாதனமும் - சனாதனிகளும் தங்களது ஆட்டத்தை நிறுத்தாமல் தொடர்ந்து கொண்டே இருக்கிறார்கள் என்பது உண்மைதான்.

இத்தகைய சனாதனத்தையும் - சனாதனிகளையும் தொடக்கக் காலத்தில் இருந்து அம்பலப்படுத்தியதில் பெரும் பங்கு வகித்தது திராவிட இயக்கம். அதனால்தான் திராவிட இயக்கத்தின் மீது அவர்களுக்கு அடங்காத கோபம். 'சனாதன - வர்ணாசிரமத்தில்' மட்டும் கை வைக்காமல் இருந்திருந்தால் மற்ற இயக்கத்துக்குள் ஊடுருவியதைப் போல திராவிட இயக்கத்துக்குள்ளும் அவர்கள் ஊடுருவி இருப்பார்கள். இயக்கத்தையே அழித்திருப்பார்கள். சிதைத்திருப்பார்கள்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்கு ஆறறிவும் கடந்த பகுத்தறிவு இருந்தது. பட்டறிவு இருந்தது. அதனால்தான் இயக்கத்தின் நோக்கத்தைச் சரியாக வரையறுத்தார். மேல் கட்டுமானத்தை மாற்றினால் போதாது, அடிக் கட்டுமானத்தை சரியாக உருவாக்க வேண்டும் என்றார். அவரால் உருவாக்கப்பட்ட இயக்கத்துக்குள் ஆரிய சக்திகள் - சனாதன சக்திகளால் ஊடுருவ முடியவில்லை.

அரசியல் இயக்கம் கண்டாலும், 'ஆரிய மாயை' உணர்ந்தவராக பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தார்கள். 'நான் மிக மிக மிக பிற்படுத்தப்பட்டவன், எத்தனை மிக மிக மிக வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள்' என்றார் தமிழினத் தலைவர் கலைஞர். 'ஆரியத்தை வீழ்த்த வந்த திராவிடத்தின் வாரிசுகள் நாங்கள்' என்று நெஞ்சு நிமிர்த்திச் சொல்லி வருகிறார் 'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். 'சனாதனத்தை எதிர்க்க முடியாது, ஒழிக்கத்தான் முடியும்' என்று சொல்லத் தொடங்கி இருக்கிறார் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவர் வாக்கின் இன்றைய வடிவம்தான் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உரையாகும். ஈராயிரம் ஆண்டுகளாக நடைபெற்று வரும் போராட்டத்தின் இன்றைய வடிவம் இது.

**'ஒழித்தல்' என்றால் சனாதன எண்ணங்களை ஒழித்தலே தவிர, சனாதனிகளை ஒழித்தல் ஆகாது. 100 ஆண்டுகளாக இயக்கம் நடத்திய பெரியார் அவர்கள் எந்தக் கோவிலையும் இடிக்கவில்லை. எந்த எதிரியையும் அழிக்கவில்லை. பெரியாரும் அண்ணாவும் கலைஞரும் எழுதியதற்காக - பேசியதற்காக கைது செய்யப்பட்டு சிறை இருந்திருக்கிறார்களே தவிர வன்முறைகளில் அல்ல. அது திராவிட இயக்கத்தின் பாணியும் அல்ல. கொள்கை வரலாறு உண்டே தவிர, கொலை வரலாறுகள் கிடையாது.**

**'அழித்தொழித்தலின் வரலாறு' சுதந்திர இந்தியாவில் மகாத்மா காந்தியில் தொடங்குகிறது. அதனைச் செய்தது யார்? 'இனப்படுகொலையின் வரலாறு' 2002 குஜராத்தில் நடந்தது. அதனைச் செய்தது யார்? மசூதியை கடப்பாரையைக் கொண்டு தகர்த்தது யார்? குடியுரிமைச் சட்டத்தின் நோக்கமும், பொது சிவில் சட்டத்தின் நோக்கமும் இனச் சுத்திகரிப்பு அல்லாமல் வேறென்ன?**

**"சனாதனக் கோட்பாட்டைத்தான் நான் விமர்சித்தேன். எதுவுமே மாறக் கூடாது என்று சனாதனிகள் சொல்கிறார்கள். எல்லார்க்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பது நமது நோக்கம்"** என்று மிகமிகச் சரியாக தீர்மானப் பதிலளித்து விட்டார் கொள்கை வாரிசான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள். இதற்கு பதிலளிக்க நினைப்பவர்கள், சனாதனம் என்பது அனைவருக்கும் பொதுவானதுதான் என்று வாதிட்டால் வரவேற்கலாம். அது அவர்களால் முடியாது.

'சனாதனத்தை' வரிவரியாய் உரித்து தொங்க விட்டவர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள். **'சமூக உரிமைச் சட்டங்களிலேயே மிகக் கொடூரமான சட்டமே மனுதான்' என்றவர் அவர். "இந்த சதுர்வர்ண முறையை நான் அறவே வெறுக்கிறேன். எனது முழு இயற்கையும் அதை எதிர்த்து எழுகிறது. வெறும் உணர்ச்சியின் அடிப்படையில் மட்டும் நான் இதனை எதிர்க்கவில்லை. ஒரு சமூக அமைப்பு என்ற முறையில் சதுர்வர்ணம் நடைமுறை சாத்தியமற்றது. தீமை நிறைந்தது. இழிந்த தோல்வியை கண்டது. சதுர்வர்ண முறை என்பது மிகக் கொடூரமான முறையாகும்"** என்றார் அண்ணல் அம்பேத்கர். எனவே சனாதனத்துக்கு பொய் புனுகு பூசி எடுத்து வர சனாதனிகள் முயற்சிக்கிறார்கள்.

**பத்தாண்டு கால ஆட்சியில் சொல்லிக் கொள்வதற்கு எந்தச் சாதனையும் செய்யாத பா.ஜ.க., எதிர்க்கட்சிகள் சொல்லும் கருத்துகளில் இருந்து ஏதாவது ஒரு வார்த்தையை எடுத்து - திரித்து அதன் மூலமாக திசை திருப்பப் பார்க்கிறது. 'சனாதனத்தை ஒழித்தல்' என்பதை இன அழிப்பு என்று அவர்களாக - அவர்களது புத்திக்கு ஏற்ப திரித்துக் கொள்கிறார்கள்.**

**வோட்டு வாங்க பா.ஜ.க.விடம் சொல்வதற்கு எதுவும் இல்லை. அதனால் பொய்யை எடுத்து வருகிறார்கள். 'பேச நா இரண்டுடையாய் போற்றி போற்றி' என்று எழுதியவர் பேரறிஞர் அண்ணா!**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.9.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், குறைந்த அளவு பரப்பில் வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகள் சிறிய வகை வேளாண் இயந்திரங்களை கொண்டு உழவுப் பணிகள் மற்றும் இதர வேளாண் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, 35 கோடி ரூபாய் மானியத்தில் 3,907 விவசாயிகளுக்கு பவர்டில்லர்கள் மற்றும் 293 விவசாயிகளுக்கு விசை களையெடுப்பான் கருவிகள் என மொத்தம் 4,200 விவசாயிகளுக்கு இக்கருவிகளை வழங்கிடும் விதமாக மூன்று விவசாயிகளுக்கு பவர்டில்லர்கள் மற்றும் விசை களையெடுப்பான் கருவிகளுக்கான ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### 2023 - 2024 பாசன ஆண்டில் - கர்நாடகாவிடம் இருந்து

# உரிய நீர் பங்கைப் பெற மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்!

## தமிழ்நாடு அரசு செய்திக்குறிப்பு!

சென்னை, செப். 5-

2023-2024 பாசன ஆண்டில் கர்நாடகாவிடம் இருந்து உரிய நீர் பங்கைப் பெற காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) மற்றும் உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய செய்திக் குறிப்பு வருமாறு:-

மேட்டூர் நீர்த்தேக்கத் தில், திட்டமிடப்பட்ட நாளான 12.06.2023 அன்று இருந்த 69.25 டி.எம்.சி நீர் இருப்பு (CARRYOVER STORAGE), இந்திய வானிலை ஆய்வுத்துறையின் (IMD) அறிக்கையின்படி இந்த ஆண்டு பருவமழை சராசரி அளவில் இருக்கும், மற்றும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர அட்டவணைப்படி பில்லிகுண்டுலுவில் பெறப்பட வேண்டிய நீர் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, குறுவை பயிரிடுவதற்கும், சம்பா பயிர்களுக்கான ஆயத்தப் பணிகளைத் தொடங்குவதற்கும் ஏதுவாக 12.06.2023 அன்று நீர் திறக்கப்பட்டது.

2. 2023-2024 நீர் ஆண்டில் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு (CWRC) 81வது, 82வது, 83வது, 84வது மற்றும் 85வது கூட்டங்களை 30.6.2023 முதல் 28.8.2023 வரை நடத்தியது, அவ்வாறே காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் (CWMA) 21வது, 22வது மற்றும் 23வது கூட்டங்கள் 16.6.2023, 11.8.2023 மற்றும் 29.8.2023 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

இந்த கூட்டங்களில் தமிழ்நாடு உறுப்பினர் தமிழ்நாட்டின் பங்கை கர்நாடகா குறிப்பிட்ட அட்டவணைப்படி அளிக்க வலியுறுத்தி வந்தார்கள். இருப்பினும் கர்நாடக அரசு அட்டவணைப்படி நீரை அளிக்கவில்லை. குறைபாடு ஜூன் முதல் அதிகரித்து வந்தது. இதை சரிசெய்ய காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை தமிழ்நாடு தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

3. கர்நாடகாவில் உள்ள 4 பெரிய நீர்த்தேக்கங்களின் 09.8.2023 நிலவரப்படி சராசரி ஆண்டில் கிடைக்க வேண்டிய நீரில் 42.54% குறைபாடு உள்ளது என காவிரி நீர் முறைப்படுத்தும் குழு கணக்கிட்டுள்ளது.

இவ்வாறு குறைபாட்டை கணக்கிடுவது ஒன்றிய அரசின் 01.6.2018 தேதியிட்ட அரசிதழ் அறிக்கையின்படி இருக்கவேண்டும். இதன்படி, 09.8.2023 அன்று வரை தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய 37.971 டி.எம்.சி நீர் குறைப்பாடுள்ளது. இதை உடன் அளிக்கவும் மற்றும் அதன் பிறகு அட்டவணைப்படி அளிக்கவும் கர்நாடக அரசை வலியுறுத்த கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால், இவைகளை கருத்தில் கொள்ளாமல் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு (CWRC) தானே கணக்கிட்டு தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய பற்றாக்குறை நீரை பெற்றுத்தர எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், 10.8.2023 அன்று நடந்த 84வது கூட்டத்தில் 10.8.2023 அன்று 11 ஆகஸ்டு 2023 முதல் அடுத்த 15 நாட்களுக்கு 15,000 கனஅடி நீர் விடுவிக்க கர்நாடக அரசிற்கு அறிவுறுத்தியது. தமிழ்நாடு காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) 11.8.2023 அன்று நடைபெற்ற 22வது கூட்டத்தில் குறைந்தது வினாடிக்கு 24,000 கன அடி தேவை என்றும் ஆகையால் கிடைக்க வேண்டிய குறைபாட்டு நீரை உடனளிக்கவும், அதை தொடர்ந்து அட்டவணையின்படி நீரை பெற்றுத்தர கேட்டுக்கொண்டது. ஆனால் தமிழ்நாட்டின் கோரிக்கைகளை கருத்தில் கொள்ளாமல் தன்னிச்சையாக, கர்நாடகம் விடுவிக்க வேண்டிய நீரின் அளவை 15,000 கன அடியிலிருந்து (CWRC) 10,000 கனஅடியாக (CWMA) எந்த முகாந்திரமும் இல்லாமல் குறைத்தது. மேலும், பில்லிகுண்டுலுவில் 01.06.2023 முதல் 09.08.2023 வரையிலான 37.971 டி.எம்.சி. பற்றாக்குறையை கர்நாடகா அளிக்க எந்தவித ஆணையையும் பிறப்பிக்க தவறிவிட்டது.

4.28.08.2023 அன்று நடைபெற்ற கூட்டத்திலும் CWRC இந்த குறைபாடு ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 27.08.2023 வரை குறைபாடு விகிதாசாரப்படி கிடைக்க வேண்டிய மீதமுள்ள நீர் 8.988 டி.எம்.சி. என கணக்கிட்டுள்ளது. இருப்பினும் இந்த நீரை பெற்றுத்தர எந்தவித உத்தரவும் பிறப்பிக்கவில்லை, ஆனால் 29.08.2023 முதல் 12.09.2023 வரை கிடைக்க வேண்டிய நீர் குறைபாட்டை கணக்கில் கொண்டு, 9.341 டி.எம்.சி. (7200 கனஅடி வீதம்) என கணக்கிட்டு அதையும் எக்காரணமும் இல்லாமல் வினாடிக்கு 5,000 கன அடி என குறைத்து பில்லிகுண்டுலுவில் அளிக்க கர்நாடகாவை கேட்டுக் கொண்டுள்ளது. இந்நிலையில், 29.08.2023 அன்று நடைபெற்ற 23வது கூட்டத்தில், CWMA 5,000 கனஅடியாக எந்த அடிப்படையும் இல்லாமல் குறைத்துள்ளது என தெரிவிக்கப்பட்டது. மேலும், 01.06.2023 முதல் 27.08.2023 வரையில் தமிழ்நாட்டிற்கு கிடைக்கப்பெற வேண்டிய குறைபாடு நீர் 8.988 டி.எம்.சி பற்றி எவ்வித அறிவுறுத்தலும் அளிக்கவில்லை. தமிழ்நாடு குறைந்தது வினாடிக்கு 24,000 கனஅடி வீதம் 28.08.2023 முதல் 10 நாட்களுக்கு கர்நாடகா பில்லிகுண்டுலுவில் அளிக்க வேண்டும் என வலியுறுத்தியது.

5. 14.08.2023 அன்று உச்சநீதிமன்றத்தில் அளித்த மனுவில் தமிழ்நாட்டிற்கு குறைந்தது வினாடிக்கு 24,000 கன அடி வீதம் ஆகஸ்டு மாதத்தில் அளிக்கவும், அதன்பின் அட்டவணைப்படி அளிக்கவும் காவிரி மேலாண்மை ஆணையம் (CWMA) தக்க நடவடிக்கை எடுக்க ஆணையிடுமாறு, உச்ச நீதிமன்றத்தை வேண்டியுள்ளது. இதனை தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தில் 31.08.2023 அன்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனுவில், நடப்பாண்டில் தமிழ்நாட்டிற்கு கிடைக்கப்பெற வேண்டிய 01.06.2023 முதல் 27.08.2023 வரையிலான குறைபாட்டு நீரான 8.988 டிஎம்சி (வினாடிக்கு 7000 கன அடி) CWRC கணக்கிட்ட கர்நாடகா அளிக்க எந்த நடவடிக்கையும் CWMA எடுக்காமலிருப்பது, அது தனது கடமையை நிறைவேற்றத் தவறிவிட்ட செயலாகும். மேலும், பற்றாக்குறையை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் 29.08.2023 முதல் 12.09.2023 வரை அளிக்கப்பட வேண்டிய 9.341 டி.எம்.சி என அதுவே கணக்கிட்டபோதிலும் (வினாடிக்கு 7200 கன அடி) அதையும் வினாடிக்கு 5000 கன அடியாக குறைத்துள்ளது எப்படி கருதினாலும் சரியானது அல்ல. மேலும், எதிர்காலத்தில் பில்லிகுண்டுலுவில் நீரை பெறுவதை உறுதி செய்வதற்கும், அறிவுறுத்துமாறும், CWMA க்கு உத்தரவிடப்பட வேண்டியும் அது கர்நாடகாவுக்கு தகுந்த ஆணையை பிறப்பிக்க வேண்டியும் அந்த மனுவில் உச்சநீதிமன்றத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வழக்கினை அவசரம் மற்றும் அவசியம் கருதி, 01.09.2023 அன்று தமிழ்நாடு அரசு கோரியதன் பேரில், உச்சநீதிமன்றம் 06.09.2023 அன்று விசாரணை செய்ய ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு விவசாய பெருமக்களின் நலன் காக்கவும், தமிழ்நாட்டின் உரிமையை காக்கவும் தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்
# கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம்!
### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 16-09-2023 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், 'முரசொலி மாறன் வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அதுபோது, கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : செப். 18 முதல் செப்.22 வரை நடைபெற உள்ள நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடர் - குறித்து**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள்- 04-09-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## பள்ளிபாளையம் ஒன்றியத்தில் மாற்றுக் கட்சியினர் 250 பேர் கழகத்தில் இணைந்தனர்!
### மா.செ.மதுரா செந்தில் முன்னிலையில்!

நாமக்கல், செப். 5 -

நாமக்கல் மேற்கு மாவட்டம் பள்ளிபாளையம் ஒன்றியத்தில் மாற்றுக் கட்சியினர் 70 பெண்கள் உட்பட 250 பேர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியச் செயலாளர் இளங்கோவன் ஏற்பாட்டில், பாரத ஹிந்த் பரிவார் அமைப்பின் மாநில தொழிலாளர் அணி துணைத் தலைவர் தலைமையில், கொக்கராயன்பேட்டை, புதுப் பாளையம், காடச்சநல்லூர், ஓடப்பள்ளி, கோவிந்தம்பாளையம் பகுதிகளில் இருந்து 70 பெண்கள் உட்பட 250 பேர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டனர்.




### பீர்க்கங்கரணை கேஸ் சிலிண்டர் வெடிப்பு!
# சிலிண்டர் தரம் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்!
### பெட்ரோலிய அமைச்சருக்கு டி.ஆர்.பாலு எம்.பி. கோரிக்கை!

சென்னை, செப். 5-

சென்னை, தாம்பரம், பெருங்களத்தூர் தேசிய நெடுஞ்சாலை அருகில் உள்ள பீர்க்கங்கரணையில், 2.9.2023 அன்று தெருவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வீட்டு உபயோக சமையல் கேஸ் சிலிண்டர் வெடித்து விபத்து ஏற்பட்டது. அந்நேரம் விபத்து நடந்த இடத்துக்கு எதிரில் இருந்த பள்ளி திறக்கப்படாததாலும், மக்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத காரணத்தாலும் எந்த உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. மேலும், அந்த வாகனத்தில் இருந்த மற்ற சிலிண்டர்களும் வெடி விபத்தில் சிக்கவில்லை என்பதால் பெரிய விபத்து நிகழாமல் தப்பியது.



**விசாரணை தேவை!**

இந்த சிலிண்டர் வெடி விபத்து தொடர்பாக அப்பகுதி பொதுமக்களும், தாம்பரம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ.வும் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலுவிடம் நேரில் சந்தித்து விவரங்களைத் தெரிவித்தனர்.

வெடி விபத்தை ஏற்படுத்திய சமையல் எரிவாயு சிலிண்டர் அப்பகுதியில் உள்ள இந்தியன் ஆயில் நிறுவனத்தின் இண்டேன் கேஸ் விநியோகம் செய்யும் சரவணா ஏஜென்சிக்கு சொந்தமானது என்று தெரிவித்தனர். மேலும், இது தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் வைத்தனர்.

**பெட்ரோலிய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரிக்கு கடிதம்!**

விவரங்களைக் கேட்டறிந்த டி.ஆர்.பாலு, எம்.பி. இந்த சிலிண்டர் வெடி விபத்து குறித்து ஒன்றிய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அவர்களுக்கு உடனடியாக விரிவான கடிதம் எழுதி உள்ளார். பெட்ரோலிய அமைச்சருக்கு நேற்று (4.9.2023) எழுதிய தனது கடிதத்தில் டி.ஆர்.பாலு பல்வேறு வினாக்களை எழுப்பியுள்ளார்.

நின்ற நிலையில் இருந்த வாகனத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கேஸ் சிலிண்டர் தானாகவே எப்படி வெடிக்க முடியும்? சிலிண்டர் தயாரிப்பில் குறைபாடுகள் உள்ளனவா? உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்கில் சிலிண்டர்களின் தரம் மற்றும் பாதுகாப்பு அம்சங்களில் எண்ணெய் நிறுவனங்கள் சமரசம் செய்கின்றனவா? சிலிண்டர்கள் மக்களுக்கு விநியோகம் மேற்கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறை விதிகளைப் பின்பற்றுவதில் தவறு நேர்ந்துள்ளதா? எனப் பல கேள்விகளை கேஸ் உபயோகிப்பாளர்களும் பொதுமக்களும் எழுப்பி உள்ளபடியால் அவற்றுக்கு விடை காண உடனடியாக உரிய விசாரணையை ஒன்றிய அரசு மேற்கொள்வதுடன் கேஸ் சிலிண்டர்கள் முழு பாதுகாப்புடன் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று டி.ஆர்.பாலு எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

### விழுப்புரம் மாவட்டம் – நவமால்மருதூரில்
# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!
### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 5-

விழுப்புரம் மாவட்டம், நவமால்மருதூரில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கடந்த சில தினங்களுக்கு முன்னர் விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம், நவமால்மருதூர் ஊராட்சி லெனின் நகர் பகுதியில் அசுத்தமான குடிநீரை அருந்தியதால், அப்பகுதியைச் சேர்ந்த மற்றும் அங்கு நடைபெற்ற திருவிழாவில் கலந்துகொள்ள வெளியூரிலிருந்து வருகை புரிந்திருந்தவர்களுக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்றுவந்த கடலூர் மாவட்டம், செல்வன் குப்பம் பகுதியைச் சேர்ந்த திருமதி.சியாமளா, க/பெ. சுப்பையா என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த திருமதி. சியாமளா அவர்களின் கணவர் மற்றும் குழந்தைகளுக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.



## தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா -
## தி.மு.க. பவள விழா ஆண்டு
# தி.மு.க. முப்பெரும் விழா 2023

கலைஞர் 100 1924 - 2023

நாள் : 17-09-2023 மாலை 5.00 மணி.
இடம் : பள்ளிகொண்டா. வேலூர்

வரவேற்புரை :
**ஏ.பி. நந்தகுமார்,** எம்.எல்.ஏ.,
செயலாளர், வேலூர் மாவட்ட தி.மு.க.

தலைமை :
பொதுச்செயலாளர் **துரைமுருகன்**

**முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை பரிசு வழங்கும் விழா**
**"கழக விருது"க்காக** தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில்
ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று
- பணமுடிப்பு வழங்குதல்

விருது - பரிசுகள் வழங்கிச் சிறப்புரை :
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**தலைவர் மு.க.ஸ்டாலின்**

: வாழ்த்துரை :
பொருளாளர் **டி.ஆர். பாலு**
முதன்மைச் செயலாளர் **கே.என்.நேரு**
துணைப் பொதுச்செயலாளர்கள் முனைவர் **க.பொன்முடி**
**ஆ.இராசா**
**கனிமொழி கருணாநிதி**
அந்தியூர் **ப.செல்வராஜ்**

நன்றியுரை :
**ப.கார்த்திகேயன்,** எம்.எல்.ஏ.,
செயலாளர், வேலூர் மாநகர தி.மு.க.


**பெரியார் விருது**
**திரு. கி.சத்தியசீலன்**


**அண்ணா விருது**
**திரு. க.சுந்தரம்**


**கலைஞர் விருது**
மாண்புமிகு **ஐ. பெரியசாமி**


**பாவேந்தர் விருது**
திருமதி **மலிகா கதிரவன்**


**பேராசிரியர் விருது**
**திரு.ந.இராமசாமி**

**தி.மு.க. தலைமைக் கழகம்**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.9.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், வடகிழக்கு பருவமழை குறைவாக பெய்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 181 கோடியே 40 இலட்சம் ரூபாய் மிதமான வேளாண் வறட்சி நிவாரணம் வழங்கும் பணியினை தொடங்கி வைக்கும் விதமாக மூன்று விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்குவதற்கான செயல்முறை ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வேளாண்மை – உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் முனைவர் இரா. நந்தகோபால், வேளாண்மை ஆணையர் முனைவர் இல. சுப்பிரமணியன், வேளாண்மை வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத் துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன், வேளாண்மை துறை கூடுதல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் முனைவர் இரா. முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கடலூர் மாவட்டத்தில் சாலை விபத்து: உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 5 -

கடலூர் மாவட்டத்தில் சாலைவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள் நேற்று முன்தினம் (3.9.2023) வெளியிட்ட அறிவிப்பு வருமாறு :-

கடலூர் மாவட்டம், காட்டு மன்னார்கோயில் வட்டம், மோவூர் மேற்கு கிராமம், பிரதான சாலையில் 29.2023 அன்று இரவு முட்டம் கிராமத்திலிருந்து காட்டுமன்னார் கோயில் நோக்கிச் சென்ற இருசக்கர வாகனமும், காட்டுமன்னார் கோயிலில் இருந்து சென்ற நான்கு சக்கர வாகனமும் எதிர்பாராத விதமாக மோதி ஏற்பட்ட விபத்தில் கடலூர் மாவட்டம், முட்டம் கிராமத்தைச் சேர்ந்த சக்திவேல், (த/பெ. மகேந்திரன்) (வயது 25) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தி யினைக் கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

உயிரிழந்த சக்திவேல் அவர்களின் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும், இவ்விபத்தில் காயமடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் அஜித் மற்றும் சுபாஷ் சந்திரபோஸ் ஆகிய இருவருக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்திரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## இனப்படுகொலைக்கு அழைப்பு விடுவதாக

# பொய்யை பரப்பும் பத்தாம் பசலிக் கூட்டம்!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் பா.ஜ.க.விற்கு கண்டனம்!

சென்னை, செப். 5 -

இனப்படுகொலைக்கு அழைப்பு விடுவதாக பொய்யை பரப்பும் மோடி, அமித்ஷா, நிர்மலா சீதாராமன், நட்டா, அண்ணாமலை ஆகியோர் பத்தாம் பசலித்தனமாக நடந்து கொள்வதாக ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் குட்டு வைத்துள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் சனிக்கிழமையன்று சென்னையில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்று தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன் வைத்த கருத்தை திரித்தும், திருகியும் சங் பரிவாரக் கூட்டம் வெறுப்பு அரசியலை விசிறி அடிக்கத் துவங்கியுள்ளது.

ஆர்.எஸ்.எஸ். பரிவாரத்தின் வழக்கமான ஆயுதமான பொய்யையும், புனை சுருட்டையும் அள்ளிவீசுகின்றனர். ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பா.ஜ.க. தலைவர்கள் நட்டா, அண்ணாமலை என அனைவரும் களத்தில் இறங்கியுள்ளனர்.


தீக்கதிர்
2023 செப்டம்பர் 04 திங்கட்கிழமை

பத்தாம் பசலிக் கூட்டம் பதறுவது ஏன்?

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் - கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் சனிக்கிழமையன்று சென்னையில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்று தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன் வைத்த கருத்தை திரித்தும், திருகியும் சங் பரிவாரக் கூட்டம் வெறுப்பு அரசியலை விசிறி அடிக்கத்துவங்கியுள்ளது.

ஆர்எஸ்எஸ் பரிவாரத்தின் வழக்கமான ஆயுதமான பொய்யையும், புனை சுருட்டையும் அள்ளிவீசுகின்றனர். ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பாஜக தலைவர்கள் நட்டா, அண்ணாமலை என அனைவரும் களத்தில் இறங்கியுள்ளனர்.

மாநாட்டில் பேசிய யாரும் எந்தவொரு மதத்தைச் சேர்ந்தவர்களையும் புண்படுத்தும் படியோ, இழிவுபடுத்தும்படியோ எதுவும் பேசவில்லை. மாறாக, சனாதனம் என்ற பெயரில் பல நூறு ஆண்டுகளாக உழைக்கும் மக்களை அடிமைப்படுத்தக்கூடிய சிந்தனைகளைத்தான் கண்டித்தார்கள். பிறப்பின் அடிப்படையில்தான் ஒருவருடைய தகுதி தீர்மானிக்கப்படுகிறது என்ற சாதிய மேலாதிக்கக் கோட்பாட்டையும் பெண்ணடிமைத்தனத்தை நியாயப்படுத்தக் கூடிய கருத்துக்களையும் மூடநம்பிக்கைகளையும் சாடினர்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும்போது, கணவனை இழந்த பெண்களை நெருப்பில் தள்ளி உடன்கட்டை ஏற வைத்தது, கைம்பெண்களுக்கு மொட்டைஅடித்து வெள்ளைப்புடவை உடுத்தச் சொன்னது, குழந்தைத் திருமணங்களை நடத்தி வைத்தது, இதைத்தானே பெண்களுக்கு சனாதனம் செய்தது என்று சரியாகவே கேட்டார். பெண்களுக்கு எதிரான இந்தக் கொடுமைகளை எதிர்த்து இந்தியாவில் நீண்ட நெடிய போராட்டங்கள் நடந்துள்ளன. இந்தக் கொடுமைகள் எல்லாம் மநு அநீதியின் பெயராலும் வர்ணாசிரமத்தின் பெயராலும் நடத்தப்பட்டன என்பதை இன்றைக்கு அலறுபவர்கள் மறுக்க முடியுமா?

மோடி அரசு கொண்டு வந்துள்ள விஸ்வகர்மா திட்டம் குலக் கல்வியை மீண்டும் கொண்டுவரும் திட்டம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இதையெல்லாம் மறைத்துவிட்டு இனப்படுகொலைக்கு அழைப்பு விடுப்பதாக சங்பரிவாரம் பொய்யை பரப்புகிறது. தில்லியில் பொய்ப் புகார் கொடுக்கின்றனர். ஆனால் தன்னுடைய வார்த்தைகளில் தாம் உறுதியாக இருப்பதாகவும் சட்டப்பூர்வமாக எதிர்கொள்வேன் என்றும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார். மாறாத தர்மம் என்று சொல்லி சாதிய மேலாதிக்கத்தை நியாயப் படுத்துபவர்களின் வழிவந்தவர்கள்தான் இன்றைக்கு ஆத்திரத்தில் அவதூறு செய்கின்றனர். சனாதனத்தின் பெயரால் இஸ்லாமிய, கிறிஸ்தவ பட்டியலின மக்களை படுகொலை செய்பவர்கள், இல்லாத ஒன்றை பொல்லாத வகையில் திரித்துப் பேசுவதை இந்தியா நிராகரிக்கும்.

இவ்வாறு ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் சாடியுள்ளது.

## தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு!

# மாவட்ட-மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் - இடம், தேதி மாற்றம்!

## செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட & மாநகர தலைவர், துணைத்தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம் நாளை ( செப்.6) நடைபெறவிருந்த நிலையில், இடம், தேதி மாற்றம் செய்யப்பட்டு 07.09.2023 வியாழக்கிழமை அன்று சென்னை இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. காலை 10 மணிக்கு துவங்கும் இந்நிகழ்வில் கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு பொறுப்பாளர் அந்தியூர் செல்வராஜ், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே.எஸ். மஸ்தான், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவிருக்கின்றனர்.

இதில், அனைத்து மாவட்ட, மாநகர கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள்: முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி, தலைவரின் சமூகநீதி மற்றும் மதசார்பின்மை கோட்பாடுகள், கொள்கைகள், செயல்பாடுகள், உள்ளூர் நிகழ்ச்சிகளாக, ஆவணப்படங்களாக. கருத்தரங்கமாக, சமத்துவம் போற்றும் சமபந்தி உபசரிப்பாக நடத்துவது குறித்து.

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு



தேனி தெற்குமாவட்டம் ஆண்டிபட்டியில் இருந்து கொட்டோடைப்பட்டிக்கு பேருந்து சேவையை ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.இந்த நிகழ்ச்சியில் மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் ராமசாமி, கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம்,பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கட்சி நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## ஜனநாயகம்-சமத்துவம்-சமூக நீதி- மதச்சார்பின்மை - சகோதரத்துவம் ஆகிய

# கோட்பாடுகளின் சரணாலயம்தான் ‘இந்தியா’ (INDIA) கூட்டணி!

மராட்டிய மாநிலம் மும்பையில் மூன்றாவது கட்டமாக இந்திய தேசிய அனைத்து மக்கள் வளர்ச்சிக் கூட்டணியின் (Indian National Developmental inclusive Alliance - I.N.D.I.A.) ஆலோசனைக்கூட்டம் 31.08.2023-ல் நடைபெற்றது. இரண்டாவது கட்டமாக பெங்களூருவில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் 26 அரசியல் கட்சிகள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். சமீபத்தில் மும்பையில் நடந்து முடிந்த மூன்றாவது கட்ட ஆலோசனைக் கூட்டத்தில் 28 அரசியல் கட்சிகள் பங்கு பெற்றன. இந்தக் கூட்டத்தில் இந்தியக் கூட்டணியின் எதிர்காலப் பணிகளை முறைப்படுத்தி நிறுவனப்படுத்தும் அடிப்படையில் குழுக்கள் அமைக்கப்பட்டன. அடுத்து நடைபெறவுள்ள நான்காவது இந்தியக் கூட்டணியின் கூட்டத்தில் தீர்க்கமான பல முடிவுகளை நிச்சயமாக மேற்கொள்வார்கள். மேலும், பல எதிர்கட்சிகள் இந்தியக் கூட்டணியில் சேர்வதற்கான வாய்ப்புகள் ஒவ்வொருநாளும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

கழகத்தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்கள் தன்னுடைய உரையில் தொலைநோக்குச் சிந்தனையுடன், ஒன்றியத்தில் அமைந்துள்ள மோடி தலைமையிலான ஆட்சிக்கு நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார் (Coundown Started). மும்பையில் நடைபெற்ற இந்தியக் கூட்டணியின் நடவடிக்கைகளும், முடிவுகளும், ஒன்றிய பி.ஜே.பி. அரசை பெரிதும் அச்சத்திற்கும், அதிர்விற்கும் ஆளாக்கியுள்ளது என்பதற்கான அவசர வெளிப்பாடுதான் “ஒரே நாடு - ஒரே தேர்தல்”. ஒன்றிய அரசின் இந்த முழக்கத்தை விவாதிப்பதற்காக நாடாளுமன்றத்தின் சிறப்புக்கூட்டம் வரும் 18-ம் தேதி முதல் 22-ம் தேதி வரையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் தலைவராக “ஒரே நாடு - ஒரே தேர்தல்” பற்றி ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்டுள்ளார். குழு உறுப்பினர்களும் பட்டியலிடப்பட்டுள்ளார்கள். அதில், எதிர்க்கட்சித்தலைவர் குழுவில் அங்கம் பெற்றிட மறுத்துள்ளார். இதில் நாட்டுமக்கள், குறிப்பாக நாட்டின் ஜனநாயகத்தின்மீதும், ஒற்றுமையின் மீதும், மாநில சுயாட்சியின் மீதும், மதச்சார்பின்மை - சமூகநீதி - சமத்துவம் - சகோதரத்துவம் ஆகிய அரசியல் சட்டத்தின் (Constitution of India) மீதும் நம்பிக்கை கொண்ட நடுநிலையாளர்கள் ஆழ்ந்து சிந்தித்து அதற்கான உரிய முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய காலத்தின் கட்டாயமும், வரலாற்றின் நிர்பந்தமும் இன்று உருவாகியுள்ளது.

வரும் 2024-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் சில மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்களும் நடைபெறவுள்ளன. சமீபத்தில் நடைபெற்ற கர்நாடக மாநிலத் தேர்தலில் பிரதமர் மோடி அவர்கள் தன்னுடைய முழுமையான செல்வாக்கைப் பயன்படுத்தியும் வெற்றிபெற இயலவில்லை. அதுமட்டுமல்ல, “இந்தியா” கூட்டணி ஒவ்வொரு கட்டத்திலும், எண்ணிக்கை பலத்தையும், ஒற்றுமையையும் உறுதிப்படுத்திக்கொண்டு வருகிறது. மாநிலங்களில் ஆட்சியில் உள்ள கட்சிகளும், மக்கள் செல்வாக்குள்ள கட்சிகளும் இந்தியா கூட்டணியில் இணைந்து வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்திற்கான அறிவிப்பும் “ஒரே நாடு - ஒரே தேர்தல்” என்ற அறிவிப்பும், முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் தலைமையில் குழு உருவாக்கமும், நாட்டுமக்கள் மத்தியில் ஆழமான அச்சத்தையும், ஐயப்பாட்டையும் உருவாக்கியுள்ளது. ஒன்றிய அரசின் இந்த அறிவிப்புகள் உள்நோக்கம் கொண்டதாக இருக்குமோ என அனுமானிக்கும் சூழ்நிலையும் உருவாகியுள்ளது.

சமீபத்தில், மூன்று திருத்தச்சட்டங்களைக் கொண்டுவந்து நாடாளுமன்ற நிலைக்குழுவிற்கு (Parlimentary Standing Commitee) அனுப்பினார்கள். இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code) என்பதை இந்தி மொழியில், “பாரதீய நியாய சங்கிட்டா” என்றும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தை (Criminal Procedure Code) “பாரதீய நகாரிக் சுயராக்சா சங்கிட்டா” என்றும், இந்திய சாட்சியச் சட்டத்தை (Evidence Act) “பாரதீய சாக்சிய மசோதா” என்றும் மாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து வழக்கறிஞர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தந்த மாநில மொழிகளில் ஏற்கனவே இந்தச்சட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் இந்தச்சட்டங்களின் தலைப்புகளையும், சில சரத்துக்களையும் இந்திமொழியில் மாற்றியிருப்பது, மறைமுகமாக திட்டமிட்டு படிப்படியாக இந்திமொழியைத் திணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையே ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைகள் வெளிப்படுத்துகிறது.

இப்படி ஒவ்வொரு அரசுத்துறையிலும் ஒன்றிய அரசு வலுக்கட்டாயமாகத் தலையிட்டு, தங்களுடைய “இந்து ராஷ்ட்ரக்” குறிக்கோளை அடைவதற்கான முயற்சிகளை மூர்க்கத்தனமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். நீதித்துறையிலும் தங்களுடைய அதிகார எல்லையை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதை அவர்களது நடவடிக்கைகளே வெளிப்படுத்துகிறது.

இத்தகைய ஒன்றிய அரசின் மதவாத அரசியலுக்கு எதிராக மக்கள் ஒன்று திரண்டுவிடுவார்கள் என்பதை இந்தியக் கூட்டணியின் தன்னெழுச்சியான விரிவாக்கமும், மக்கள் ஆதரவும் வெளிப்படுத்துகின்றன. இந்தியக் கூட்டணியின் திட்டமிட்ட ஒருமித்த நடவடிக்கையின் காரணமாக, மக்கள் ஒன்றிய அரசுக்கு எதிராக அணிதிரண்டுவிடுவார்களோ என்ற அச்சத்தில்தான் ஆளுங்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் ஆலோசனையின் அடிப்படையில், இந்திய அரசியல்சட்டத்திற்குப் புறம்பாகவே, அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்றும் முயற்சியில், விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் ஈடுபட்டுள்ளது.

இந்தக் கொடூர சிந்தனையின் பரிணாமம்தான் “ஒரே நாடு - ஒரே தேர்தல்” என்பதாகும்! இந்தப் பிரச்சினையில் நாடாளுமன்றத்தில் ஒருமித்த கருத்தைப் பெறவியலாது என்பது ஒன்றிய பி.ஜே.பி. அரசுக்கு மிக நன்றாகவே தெரியும். ஆனாலும், நாடாளுமன்றத்தில் உருவாகும் பிரச்சினைகளை மையப்படுத்தி, வேறுசில பிரச்சினைகளை உருவாக்கி தங்களுடைய ஆட்சிக்குக் காலநீட்டிப்புச் செய்யும் முயற்சியில் ஈடுபடலாம் எனவும் அனுமானிக்க முடிகிறது. கழகத்தலைவர் தளபதியார் அவர்கள் ஒன்றிய பி.ஜே.பி. அரசின் ஆட்சியின் முடிவுக்கான நாட்கள் (Coundown) எண்ணப்படுகின்றன என்ற குரல் பிரதமர் நரேந்திரமோடியையும், அவர் சார்ந்துள்ள அரசியல் அமைப்புகளையும் கடுமையாக அச்சுறுத்தியுள்ளது என்பதையே அவர்களது அவசர நடவடிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன. எது எப்படியிருப்பினும், இந்தியக் கூட்டணியின் தலைவர்கள் மிக நிதானமாகத் திட்டமிட்டு தங்கள் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார்கள். இந்தியக் கூட்டணியில் எள்ளின் முனையளவு கூட கீறல்விழாத அளவிற்கு கூட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலங்களில் உள்ள ஆளும்கட்சிகளும், வலிமையான எதிர்க்கட்சிகளும், பண்பட்ட தலைவர்களும் இணைந்துதான் இந்தியக் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்



தமிழ்நாட்டின் முதல்வர் தளபதியார் அவர்கள் ஒரு பொதுக்கருத்தை உறுதிப்படுத்திக் கொண்டே வருகிறார். அந்தக் கருத்துத்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசை அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்பதே ஒரே நோக்கமாக இருக்க வேண்டும். எனவே, அதற்கான ஒற்றுமையை வலுப்படுத்தவேண்டும். மேலும், வேறு சிந்தனையின்றி அந்த இலக்கு நோக்கிப் பந்தயக்குதிரையாய் பணியாற்ற வேண்டும், இதனைத் தொடர்ந்து, மற்றைய முடிவுகளை உரிய காலத்தே கூட்டு முயற்சியில் மேற்கொள்ளலாம் என்கின்ற சிறந்த அரசியல் ஆலோசனையை தொடர்ந்து வலியுறுத்திவருகிறார்.

எனவே, எந்தச் சூழ்நிலையிலும் ஆளுகின்ற பாரதீய ஜனதாக்கட்சியோ அல்லது அந்தக்கட்சியின் சீர்பாதம் தாங்கிகளோ ஊடுருவ இயலாத எஃகுக் கோட்டையாக, இந்தியக் கூட்டணி இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த எஃகுக் கோட்டைதான் ஜனநாயகம் - சமத்துவம் - சமூகநீதி - மதச்சார்பின்மை - சகோதரத்துவம் ஆகிய மக்கள் நல்வாழ்வின் அடிப்படைக் கோட்பாடுகளின் சரணாலயம் ஆகும்!! “ஒரே நாடு - ஒரே தேர்தல்” என்ற பாரதீய ஜனதாக் கட்சியின் இந்த முழக்கம் அனைத்து அதிகாரங்களையும் ஓர் இடத்தில் கொண்டுசெல்லும் வழித்தடங்களாகும். அதிகாரங்கள் ஓர் இடத்தில் குவியுமானால், அது சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும். இப்படித்தான் உலகநாடுகள் சிலவற்றில் சர்வாதிகாரம் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. எனவே, இந்திய நாட்டுமக்கள் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் இருந்து தீரவேண்டிய காலக்கட்டாயம் உருவாகியுள்ளது.

தமிழ்நாடு முதல்வர், கழகத்தலைவர் தொலைநோக்குடன் எடுத்துவைத்த முழக்கத்தையும், விளக்கத்தையும் தமிழ்நாட்டில் ஒவ்வொரு இல்லந்தோறும் எடுத்துவைக்கும் தலையாய கடமை அனைத்துக் குடிமக்களுக்கும் உண்டு என்பதை உணர்வீர்!! காலத்தே களத்தில் செயல்படுத்துவீர்!!


05.09.2023, செவ்வாய்கிழமை
தென்காசி மாவட்டத்தில்
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி
மற்றும் இளைஞரணி செயல்வீரர்கள்
கூட்டத்திற்கு வருகை தரும்....
கழக இளைஞர் அணி செயலாளர்
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்...
மாண்புமிகு
கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்
அவர்கள்
தமிழக வருவாய்த்துறை மற்றும் பேரிடர்துறை அமைச்சர்
வே.ஜெயபாலன்
தென்காசி தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர்
ஆ.ஜெயக்குமார் M.A.,LL.B.,
ஒன்றிய கழக செயலாளர்
கடையம் தெற்கு ஒன்றிய தி.மு.க


கலைஞர்
100
1924 - 2023
செப். 5.
தென்காசி மாவட்ட
அரசு வளர்ச்சிப் பணிகள் ஆய்வு..
மற்றும்
கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி &
இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு
வருகைதரும்
கழக இளைஞர் அணி செயலாளர்,
மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை
மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர்.
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக ! வருக !!
Dr.பூங்கோதை ஆலடி அருணா
மாநில சுற்றுச்சூழல் அணித்தலைவர்,
தென்காசி மாவட்டம்.


முன்னோடிகள் நம் வழிகாட்டிகள்! முன்னின்று உதவுவோம் அவர் பாதையில்!!
தென்காசி
தெற்கு – வடக்கு
மாவட்ட தி.மு.க.
சார்பில்
கழக மூத்த
முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழா
நாள் : 5.9.2023 செவ்வாய்க்கிழமை
இடம் : தென்காசி
பொற்கிழி வழங்கி
சிறப்புரையாற்ற வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக. வருக..
அன்புடன் மகிழ்ந்து வரவேற்கும்
கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்
ஈ.ராஜா எம்.எல்.ஏ.
தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர்
வே.ஜெயபாலன்
தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர்
ARASU ARTS
பகுத்தறிவு ஊட்டி பண்பு வழி காட்டி வகுத்த நம் கலைஞரின் கொள்கை முழங்குவோம்!



செப்டம்பர் 5-ல்
தென்காசி மாவட்டத்தில் கழக முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கிடவும், மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள்
கூட்டத்திற்கும் வருகை தரும்...
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாநில திமுக இளைஞர் அணி செயலாளர்
அவர்களே வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்...
மாண்புமிகு. K.K.S.S.R.இராமச்சந்திரன் அவர்கள்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்,
விருதுநகர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்.
மாண்புமிகு. தங்கம் தென்னரசு அவர்கள்
நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர்,
விருதுநகர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்.
திரு. ஜெயபாலன் அவர்கள்
தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர்
திரு. ஈ.ராஜா அவர்கள்
தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர்
உயர்திரு. தனுஷ் எம் குமார் MP அவர்கள்
தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர்
விருதுநகர் தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர்

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் அணுகுமுறை
# கலைஞரை நினைவூட்டியது!
### மூத்த பத்திரிகையாளர் பா.கி.நெகிழ்ச்சி!





**சென்னை, செப். 5-**

**‘முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அணுகுமுறை கலைஞர் அவர்களையே எனக்கு நினைவூட்டியது’ என்று மூத்த பத்திரிகையாளர் பா.கி.நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:-

தி.மு.க. அரசியலை விமர்சித்து வந்தாலும், கலைஞரின் இதழியல், இலக்கிய முகத்தைப் பெரிதும் ரசிக்கும் நான் அவரைப் பற்றி எழுதிய கட்டுரை நேற்றைய ‘முரசொலி’ இதழில் பிரசுரமாகியிருந்தது. என் எழுத்தைக் கொஞ்சம் கூட மாற்றாமல், குறைக்காமல் பிரசுரித்திருந்தார்கள். மேலும், கட்டுரையை திரு.முரசொலி செல்வம் பாராட்டினார். அதை விட வியப்பானது, இரவு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கைபேசியில் அழைத்துக் கட்டுரை குறித்துப் பாராட்டினார். டி.வி. விவாதங்களில் நான் பங்கேற்பதைப் பார்ப்பதாகக் குறிப்பிட்டார். நான், “தி.மு.க. அரசை ஆக்கபூர்வமாகவே விமர்சிப்பேன். அரசியல் நோக்கமில்லை" என்றேன்.” தெரியும். அப்படிப் பேசுவதைக் கவனித்து வருகிறேன்" என்று மனம் திறந்து பேசினார். நெகிழ்வாகஇருந்தது. திரு.மு.க.ஸ்டாலினைக் கூடத் தனிப்பட்ட முறையில் விமர்சிக்காமல் கருத்தியல், அணுகுமுறையை மட்டுமே விமர்சிக்கிறேன், இனியும் தொடர்வேன், அவருடன் உரையாடியது கலைஞரை நினைவூட்டியது. அவரும் இதழ்களைப் படித்துவிட்டு தொலைபேசியில் அழைத்துப் பேசுவார். திரு.ஸ்டாலினிடம் அந்த அணுகுமுறை என்னைக் கவர்ந்தது. மற்றவர்களிடம் அதைப் பார்க்க முடியவில்லை. அவ்வளவே....

இவ்வாறு பா.கி. தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

# திருமதி நூர்ஜகான் பேகம் 5 ஆம் ஆண்டு நினைவு நாள்!
### திருவுருவப் படத்திற்கு - பொன்.முத்துராமலிங்கம் - டி.கே.எஸ்.இளங்கோவன் - ஐ.பி.செந்தில்குமார் மரியாதை!

திண்டுக்கல், செப்.5-

கழக மாநில மகளிரணி புரவலர் மறைந்த நூர்ஜஹான் பேகம் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி செப்டம்பர் 1 ஆம் தேதி திண்டுக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும் பழநி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், அரசு தலைமைக் கொறடா கோ.வி.செழியன், கழக முன்னாள் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா, மாநில மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் சத்யா பழனிக்குமார், தலைவர் கலைஞர் அவர்களின் செய்தித் தொடர்பு அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்ற மருத விநாயகம், திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், திண்டுக்கல் மாநகர துணை மேயரும் மாநகர் செயலாளருமான ராஜப்பா,

கழக சொற்பொழிவாளர்கள் கரூர் முரளி, சரவெடி சரத்பாலா, போடி காமராஜ், திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழக மற்றும் திண்டுக்கல் மாநகர் கழக நிர்வாகிகள், திண்டுக்கல் மாவட்ட மற்றும் மாநகர் கழக மகளிரணி நிர்வாகிகள், திண்டுக்கல் நகர முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்று, நூர்ஜகான் பேகம் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு வகிதா பேகம் மற்றும் திண்டுக்கல் மாநகர, பகுதிக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# ‘வாட்ஸ் அப்’பில் வலம் வரும் செய்தி!




# சென்னை மாகாண முன்னாள் முதல்வர் டாக்டர் ப.சுப்பராயன் சிலை!
### முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

சென்னை, செப். 5-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் இன்று (05.09.2023) காலை 10.15 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களின் திருவுருவச்சிலையை திறந்து வைத்து, கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் 152வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்.

டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் திருச்செங்கோடு அருகே உள்ள குமார மங்கலம் கிராமத்தில் ஜமீன்தார் குடும்பத்தில் பிறந்தார். இவர் வாழ்நாளில் சென்னை மாகாணத்தின் உள்ளாட்சித் துறை அமைச்சர், கல்வி மற்றும் சட்ட அமைச்சர், உள்துறை அமைச்சர், சட்டமன்ற மேலவை உறுப்பினர். இந்தோனேசியாவிற்கான இந்தியத் தூதுவர், இந்திய நாடாளுமன்ற கீழவை உறுப்பினர், மேலவை உறுப்பினர், மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர், மகாராஷ்டிர மாநில ஆளுநர் போன்ற எண்ணற்ற பதவிகளை வகித்து, நல்ல திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கினார். மேலும், சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் பதவி வகித்தார். இவரது ஆட்சிக் காலத்தில், முதல்முறையாக அரசாங்க பணிகளில் தலித்துக்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர்களுக்கும் வகுப்புவாரி பிரதிநித்துவ அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

**வ.உ.சி. சிலைக்கு மாலை**

செக்கிழுத்த தியாகச் செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் உலகநாதன் பிள்ளை பரமாயி அம்மையார் தம்பதியருக்கு 05.09.1872ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். அடிப்படைக் கல்வியை ஒட்டப்பிடாரத்திலும், உயர்நிலைக் கல்விப் படிப்பை தூத்துக்குடியிலும், சட்டக் கல்வியை திருச்சி யிலும் பயின்று 1894 ஆம் ஆண்டு வழக்கறிஞர் ஆனார். மேலும், சமூக சேவையிலும் அரசியல் பணியிலும் படிப்படியாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் வ.உ.சிதம்பரனார் அவர்கள்.

தாய் நாட்டின் விடுதலைக்காகத் தமிழகத்திலிருந்து பங்கேற்ற தலைவர்களில் முதன்மையானவர் வ.உ.சிதம்பரனார். அரசியல் வாழ்க்கையில் பாலகங்காதர திலகரைத் தனது குருவாக ஏற்றுக் கொண்டு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை அடியோடு ஒழித்திட அரசியல் ரீதியாகவும், வணிக ரீதியாகவும் “சுதேசி நாவாய்ச் சங்கம்” என்ற கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இதனாலேயே கப்பலோட்டிய தமிழன் என்று பெயர் பெற்றார்.

வ.உசிதம்பரனாரின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த ஆங்கிலேயர்கள், அரசாங்கத்தை அவமதித்ததாகவும், சுதந்திரத்திற்காக பொது மக்களைத் தூண்டியதாகவும் இவர் மீது வழக்கு பதிவு செய்து, இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதன் காரணமாக 1908ஆம் ஆண்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டு செக்கிழுக்க வைக்கப்பட்டார்.

தமிழக மக்களால் பெரிதும் போற்றப்படும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பல்வேறு இன்னல்களுக்கு இடையிலும், தாய் மொழி தமிழ்மொழி மீது கொண்டிருந்த தணியாத தாகத்தின் காரணமாக பல அரிய நூல்களையும், சுயசரிதையையும் கவிதை வடிவில் எழுதியுள்ளார். தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில், 1975 முதல் 1976 வரை தூத்துக்குடியில் கட்டிமுடிக்கப்பட்ட 4 கப்பல் தளங்களுக்கு செக்கிழுத்த செம்மல் வ.உ.சி அவர்களின் பெயர் சூட்டப் பட்டது. 1998ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பர னார் எழுதிய 16 நூல்களும் அரசுடைமை யாக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில், அன்னாரின் 150வது பிறந்த நாளில் முத்தான 14 அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

நம் தேசத்தின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்தும் அயராது பாடுபட்டும். தாய் நாட்டிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்து, மறைந்தும் மக்களின் மனங்களில்என்றும்நிறைந்துள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் பிறந்த நாள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சிகளில், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

### ஆதித்யா எல்-1 திட்ட இயக்குநராக உயர்ந்து சாதித்துள்ள
# தமிழ்ப் பெண்மணி நிகர்ஷாஜிக்கு பாராட்டுகள்!
### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, செப். 5 -

ஆதித்யா எல்.1 திட்ட இயக்குநராக உயர்ந்து சாதித்துள்ள தமிழ்ப் பெண் மணி நிகர்ஷாஜிக்கு அகம் மகிழ்ந்த பாராட்டுகள் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பாராட்டியுள்ளார்.

அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**தென்காசி மாவட்டத்தின் செங்கோட்டையில் பிறந்து, சூரியனை ஆய்வுசெய்யும் இந்தியாவின் முதல் விண்கலமான ஆதித்யா எல்1 திட்ட இயக்குநராக உயர்ந்து சாதித்துள்ள தமிழ்ப் பெண் மணி நிகர் ஷாஜி அவர்களை அகமகிழ்ந்து பாராட்டுகிறேன்.**

**தமிழ்நாட்டின் மாநில அரசுப் பள்ளி, கல்லூரிப் பாடத்திட்டத்தில் பயில்பவர்கள் திறத்திலும் தரத்திலும் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்பதை தொடர்ந்து சந்திரயான் முதல் ஆதித்யா வரை நம் சாதனைத் தமிழர்கள் நிரூபித்துக் கொண்டே இருக்கின்றனர்.**

**இஸ்ரோவின் பெருமைமிகு திட்டத்துக்கு நிகர் சாஜி அவர்கள் தலைமைப் பொறுப்பேற்றிருப்பதைப் பார்த்து அவர்கள் குடும்பத்தினர் எத்தகைய பூரிப்பை, பெருமையை அடைந்திருக்கிறார்களோ அதே அளவுக்கு நானும் பெருமிதம் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டியுள்ளார்.




இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி மற்றும் சோளிங்கர் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள்(BLA)மற்றும் கிளைச் செயலாளர் கலந்தாய்வுக் கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளரும் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சருமான ஆர்.காந்தி சிறப்புரையாற்றினார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் ஆர். வினோத் காந்தி, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் சூர்யா வெற்றி கொண்டான், சோளிங்கர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் ஞானசேகரன், மு.சிவானந்தம், அரக்கோணம் மேற்கு ஒன்றியச் செயலாளர் சௌந்தர், ஏ.கே.சுந்தரமூர்த்தி, அசோகன், மு.கண்ணையன், கிருஷ்ணன், நசீர், ஜெயந்தி திருமூர்த்தி, நாகராஜ், துரை மஸ்தான், தமிழ்ச்செல்வன், ஜோதி, பி.வடிவேலு, பசுபதி, பெருமாள், கிருஷ்ணமூர்த்தி, ரவீந்திரன், ராஜேந்திரன், தெய்வசிகாமணி, பாலாஜி, பூர்ண சந்திரன், சீனிவாசன், ஜனார்த்தனன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஒரே நாடு - ஒரே அதிபர் என கூறிக்கொண்டு
# ஒட்டுமொத்த இந்தியாவையும் மோடி வாரி சுருட்ட நினைக்கிறார்!
### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் எச்சரிக்கை!

சென்னை, செப். 5-

ஒரே நாடு, ஒரே தேர்தல் - ஒரே அதிபர் ஒரே கட்சி என்று கூறிக்கொண்டு மோடி ஒட்டுமொத்த இந்தியாவையும் வாரி சுருட்ட நினைக்கின்றார் என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் மக்களுக்கு எச்சரிக்கை மணி அடித்துள்ளது.

அது வருமாறு:-

நாடு முழுவதும் ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கான விவாதங்களை மீண்டும் ஒன்றிய பா.ஜ. அரசு கிளப்பி விட்டுள்ளது. தேர்தலில் அளித்த வாக்குறுதிக்கேற்ப, நாடு முழுவதும் ஒரே சமயத்தில் லோக்சபா மற்றும் சட்டசபை தேர்தல்களை நடத்திட பா.ஜ. அரசு முடிவு செய்து, அதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் 8 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது. பொதுவாக ஆளும் கட்சியானது அமைக்கும் குழுக்கள், அவர்கள் மனவோட்டத்தை சித்தரிக்கும் கைப்பாவையாகவே இருக்கும். இக்குழுவிலும் பெயரளவிற்கு காங்கிரஸ் எம்.பி. ஆதிர் ரஞ்சன் சவுத்ரியை நியமித்து விட்டு, மற்றபடி தங்களுக்கு சாதகமான நபர்களை பா.ஜ. நியமித்துள்ளது.

இக்குழுவில் நாடாளுமன்றத்தில் 3வது இடத்தில் உள்ள தி.மு.க.விற்கு பிரதிநிதிகள் இல்லை. தலையாட்டி பொம்மைகளை வைத்துக் கொண்டு தாங்கள் நினைத்ததை சாதித்து விடலாம் என ஒன்றிய பா.ஜ. அரசு எண்ணுகிறது. இக்குழுவின் தலைவராக இருப்பவர் முன்னாள் ஜனாதிபதியாகும். ஜனாதிபதிகள், கவர்னர்கள் எல்லோருக்கும் பொதுவானவர்கள் என்ற கருத்தியலை பா.ஜ. எப்போதோ சுக்கு நூறாக உடைத்து விட்டது. இக்குழுவில் ராஜ்யசபாவின் எதிர்க்கட்சி தலைவராக உள்ள மல்லிகார்ஜுன கார்கேவுக்கு கூட இடமில்லை. நாடாளுமன்ற ஜனநாயக முறைகளை இழிவுப்படுத்தும் வகையில் அவரையும் புறம் தள்ளிவிட்டனர். அப்படியென்றால் இக்குழு என்ன அறிக்கை அளிக்கும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்து விடலாம்.

இந்நிலையில் ஒன்றிய அரசின் ஊதுகுழல் குழுவில் நீடிக்க தனக்கு விருப்பம் இல்லை எனக்கூறி காங்கிரஸ் எம்.பி. ஆதிர் ரஞ்சன் சவுத்ரி விலகிவிட்டார். ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ திட்டத்தை பா.ஜ. அரசு அறிமுகப்படுத்தினால் அதனால் ஏற்படும் பின் விளைவுகளையும் பார்க்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை தடாலடியாக கலைப்பதற்கு இவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? தமிழகத்தில் இரண்டரை ஆண்டு காலமாக திராவிட மாடல் நல்லாட்சி நடந்து கொண்டிருக்கிறது. இதை கலைத்துவிட முடியுமா? கேரளாவிலும், மேற்கு வங்கத்திலும் ஆட்சிகளை கலைத்து விட முடியுமா? இவ்வளவு ஏன், கர்நாடகாவில்


தினகரன்
செப்டம்பர் 4, 2023 திங்கட்கிழமை
தேவையற்ற தேர்தல்
நாடு முழுவதும் ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கான விவாதங்களை மீண்டும் ஒன்றிய பாஜ அரசு கிளப்பி விட்டுள்ளது. தேர்தலில் அளித்த வாக்குறுதிக்கேற்ப, நாடு முழுவதும் ஒரே சமயத்தில் லோக்சபா மற்றும் சட்டசபை தேர்தல்களை நடத்திட பாஜ அரசு முடிவு செய்து, அதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் 8 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது. பொதுவாக ஆளும்கட்சியானது அமைக்கும் குழுக்கள், அவர்கள் மனவோட்டத்தை சித்தரிக்கும் கைப்பாவையாகவே இருக்கும். இக்குழுவிலும் பெயரளவிற்கு காங்கிரஸ் எம்.பி. ஆதிர் ரஞ்சன் சவுத்ரியை நியமித்துவிட்டு, மற்றபடி தங்களுக்கு சாதகமான நபர்களை பாஜ நியமித்துள்ளது.

பா.ஜ.வின் ஊழல் காரணமாக சமீபத்தில் அங்கு ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது.

கர்நாடகாவின் கைப்பிள்ளையாய் தவழும் காங்கிரஸ் ஆட்சியை கலைப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? உண்மையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சொல்வது போல் ஒரே நாடு ஒரே தேர்தல் மூலம் ஒன்றிய அரசு ஒரு சதித் திட்டத்தை அரங்கேற்ற நினைக்கிறது. இதன் மூலம் ஒரே நாடு, ஒரே அதிபர் என கூறிக்கொண்டு, ஒட்டுமொத்த இந்தியாவையும் மோடி வாரி சுருட்ட நினைக்கிறார். இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசு குழு அமைத்திருப்பதை தமிழ்நாட்டில் அ.தி.மு.க. வரவேற்பதோடு, அதன் வாயெல்லாம் பல்லாக இருக்கிறது.

இச்சட்டம் நிறைவேறி விட்டால் தாமும் பலிகடா தான் என்கிற அச்ச உணர்வு அ.தி.மு.க.வுக்கு இருப்பதாக தெரியவில்லை. ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு ஒன்றிய அரசு சொல்கிற காரணங்களும் வாயால் வடை சுடுகிற கதை தான். அடிக்கடி தேர்தல் நடப்பதால் நாட்டின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சிக்கு தடை ஏற்படுகிறதாம். கடந்த 9 ஆண்டுகளாக பா.ஜ. ஆட்சியில் எப்படி பொருளாதாரம் இருந்தது, வளர்ச்சி எந்த லட்சணத்தில் இருந்தது என்பதை ஒரு நிமிடம் அவர்கள் எண்ணிப் பார்த்தாலே போதும். சர்வதிகாரம் எங்கெல்லாம் கோலோச்சுமோ, அங்கெல்லாம் ஒற்றை சொல்லுக்கே மதிப்பிருக்கும். இரு வேறு கருத்துகளுக்கு இடமிருக்காது.

இவ்வாறு தலையங்கத்தில் ‘தினகரன்’ எச்சரித்துள்ளது.



திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த கருப்பனூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி புதிய கட்டிடத்தை சி.என்.அண்ணாதுரை எம்.பி., மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., நல்லதம்பி எம்.எல்.ஏ. ஆகியோர் திறந்து வைத்தனர். கவிதா தண்டபாணி உள்ளிட்ட நிர்வாகிகள் உடனுள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.9.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், 62 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வேளாண்மை – உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் முனைவர் இரா. நந்தகோபால், வேளாண்மை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், வேளாண்மை வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத் துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன், வேளாண்மை துறை கூடுதல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் முனைவர் இரா.முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.9.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கேலோ இந்தியா மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 134 வீரர் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 2 கோடியே 24 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 10 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கேலோ இந்தியா மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற

# 134 வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.2.24 கோடிக்கான உயரிய ஊக்கத் தொகை!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப். 5 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.9.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கோலோ இந்தியா மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 134 வீரர் - வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 2 கோடியே 24 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 10 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

**ஆண்கள் தடகளப் போட்டி!**

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி 2022 மத்தியப் பிரதேச மாநிலத்தில் 30.1.2023 முதல் 11.2.2023 வரை நடைபெற்றது. இப்போட்டியில் இந்தியாவின் அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் கலந்து கொண்டன.

கோலோ இந்தியா போட்டியில் ஆண்கள் தடகளப் போட்டியில் 3 தங்கம்,

5 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 7 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்;

ஆண்கள் கூடைப்பந்து போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற 12 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 9 இலட்சம் ரூபாயும்;

ஆண்கள் வாள்வீச்சுப் போட்டியில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற 8 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 5 இலட்சம் ரூபாயும்;

ஆண்கள் ஜூடோ போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீரருக்கு உயரிய ஊக்கத் தொகையாக 1 இலட்சம் ரூபாயும்;

ஆண்கள் படகுப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற 2 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்;

ஆண்கள் நீச்சல் போட்டியில் 1 தங்கம், 6 வெள்ளி மற்றும் 7 வெண்கலப் பதக்கங்களும் வென்ற 4 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 13 இலட்சம் ரூபாயும்;

ஆண்கள் டென்னிஸ் போட்டியில் 2 தங்கம், 2 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 4 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 6 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும்;

ஆண்கள் பளுதூக்கும் போட்டியில் 2 தங்கம் மற்றும் 1 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற 3 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்;

ஆண்கள் யோகாசனப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற வீரருக்கு உயரிய ஊக்கத் தொகையாக 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்;

**பெண்கள் தடகளப் போட்டி!**

பெண்கள் தடகளப் போட்டியில் 1 தங்கம், 5 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 6 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 5 இலட்சம் ரூபாயும்;

பெண்கள் இரட்டையர் இறகுப்பந்து போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற 2 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும்;

பெண்கள் குத்துச்சண்டை போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனைக்கு உயரிய ஊக்கத் தொகையாக 1 இலட்சம் ரூபாயும்;

பெண்கள் சைக்கிளிங் போட்டியில் 3 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 3 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 4 இலட்சம் ரூபாயும்;

பெண்கள் வாள்வீச்சுப் போட்டியில் 4 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 4 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 4 இலட்சம் ரூபாயும்;

பெண்கள் மல்லர் கம்பம் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனைக்கு உயரிய ஊக்கத் தொகையாக 1 இலட்சம் ரூபாயும்;

பெண்கள் படகுப் போட்டியில் வெள்ளிப் பதக்கங்கள் வென்ற 6 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 5 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும்;

பெண்கள் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற வீராங்கனைக்கு உயரிய ஊக்கத் தொகையாக 2 இலட்சம் ரூபாயும்;

பெண்கள் நீச்சல் போட்டியில் 2 தங்கம், 5 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 4 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 7 இலட்சம் ரூபாயும்;

பெண்கள் வாலிபால் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற 14 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்;

பெண்கள் பளுதூக்கும் போட்டியில் 3 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 4 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்;

பெண்கள் யோகாசனப் போட்டியில் 1 தங்கம் மற்றும் 2 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 3 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்;

**சதுரங்க கிராண்ட் மாஸ்டர்!**

64வது தேசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன்ஷிப் போட்டி 2021ல் 4 தங்கம், 23 வெள்ளி மற்றும் 17 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 17 வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 68 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும்;

12வது தேசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி 2022ல் 4 தங்கம், 8 வெள்ளி மற்றும் 7 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 15 வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 23 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்;

தேசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி 2021ல் 3 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 3 வீரர் களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்;

தேசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி 2021-22ல் 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 6 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 13 இலட்சம் ரூபாயும்;

2023ஆம் ஆண்டிற்கான சதுரங்க கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற

எம். பிரனேஷ் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 5 இலட்சம் ரூபாயும், 2019ஆம் ஆண்டிற்கான பெண்கள் சர்வதேச சதுரங்க மாஸ்டர் பட்டம் வென்ற ரக்ஷித்தா ரவி அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 3 இலட்சம் ரூபாயும்;

என மொத்தம் 134 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனை களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக மொத்தம் 2 கோடியே 24 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று 10 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

**சென்னையில் துப்பாக்கிச் சுடும் தளம் அமைக்க நிதி!**

பஞ்சாப் மாநிலம், பாட்டியாலாவில் நடைபெற்ற Clay Pigeon Trap தேசிய ஜூனியர் துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப் போட்டி 2021ல் வெண்கலப் பதக்கம் வென்றதற்காக செல்வி நிலா ராஜா பாலு அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட உயரிய ஊக்கத்தொகையான 1 இலட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாய்க்கான காசோலையை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட சென்னையில் துப்பாக்கிச் சுடும் தளம் அமைக்கும் பணிக்காக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார். மேலும், செல்வி நிலா ராஜா பாலு அவர்கள் தில்லியில் நடைபெற்ற 65வது தேசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன்ஷிப் போட்டி 2022ல் ஜூனியர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தவர் ஆவார்.

தமிழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஒலிம்பிக் மற்றும் சர்வதேச அளவிலான போட்டியில் கலந்து கொண்டு பதக்கங்கள் வென்றிட தமிழ்நாடு அரசின் ஒலிம்பிக் தங்க வேட்டை திட்டத்தின் கீழ் முதல்முறையாக சர்வதேச அளவில் புகழ்பெற்ற வெளிநாட்டு விளையாட்டு பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டு தமிழக விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கவுள்ளனர். அதன்படி தமிழ்நாடு அரசால் நியமிக்கப் பட்டுள்ள வெளிநாட்டு பயிற்சியாளர்கள் ரோமோனிய நாட்டைச் சேர்ந்த தடகளப் பயிற்சியாளர் பெட்ராஸ் பெட்ரோசியன் (Bedros Bedrosian), டச்சு நாட்டைச் சேர்ந்த ஹாக்கி பயிற்சியாளர் எரிக் வோனிக் (Eric Wonink), அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டென்னிஸ் பயிற்சியாளர் சஞ்சய் சுந்தரம் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேற்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




### ஒரே நாடு ஒரே தேர்தல்;

# ஒன்றிய, மாநில அரசுகள் மீதான தாக்குதல்!

## ராகுல் காந்தி எம்.பி. கடும் தாக்கு!

புதுடெல்லி, செப். 5 -

அனைத்துத் தரப்பினரின் கவனத்தையும் திசை திருப்பும் ஒரே நாடு - ஒரே தேர்தல் திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மீதான தாக்குதல் என்று ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.



ஒன்றிய அரசின் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் குறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தனது ட்விட்டர் பதிவில், “இந்தியா என்ற பாரதம் மாநில அரசுகள் ஒன்று சேர்ந்த ஒன்றியமாகும். ஒரே நாடு ஒரே தேர்தலை கொண்டு வரும் திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மீது நடத்தப்படும் தாக்குதலாகும்,” என்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

**ஜெய்ராம் ரமேஷ் ட்விட்டர் பதிவு!**

அதே போல், உயர்மட்டக் குழு குறித்து காங்கிரஸ் ஊடகப் பிரிவு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது ட்விட்டர் பதிவில்,

“ஒரே நாடு ஒரே தேர்தல்” குறித்த உயர்மட்டக் குழு ஒரு சம்பிரதாய நடைமுறையாகும். இக்குழு அமைக்கப்பட்ட நேரம் மிகவும் சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது. அதன் விதிமுறைகள் மற்றும் பரிந்துரைகள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளன. இந்த குழுவில் தலைவர்களின் பெயர்கள் வேண்டுமென்றே விடுபட்டுள்ளது. அதனால் தான் மக்களவை காங்கிரஸ் குழு தலைவர் அக்குழுவில் சேர மறுத்துவிட்டார்,” என்று கூறியுள்ளார்.

# ஒரே நாடு, ஒரே தேர்தல் ஜனநாயக விரோதமானது!

## சீத்தாராம் யெச்சூரி கடும் விமர்சனம்!

*மும்பை, செப். 5 -*

‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ என்ற மோடி அரசின் நகர்வு முற்றிலும் ஜன நாயக விரோதமானது; நடைமுறை சாத்தியமில்லாதது; ஏராளமான குழப்பங்களுக்கு இட்டுச் செல்லக்கூடியது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி விமர்சித்துள் ளார்.



‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ என்ற கருத்தினை ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டு அரசியல் களத்தில் விதைத்துள்ளது. மோடி அரசின் இந்த ஆபத்தான நகர்வுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன. இந்நிலையில் மும்பையில் நடை பெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற சீத்தாராம் யெச்சூரி, “ஒன்றிய மோடி அரசு, ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற கருத்தினை செயல்படுத்துவதற்கு திட்டமிட்டிருப்பதாக தெரிகிறது. நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் என்னவென்று இதுவரை அறிவிக்கப்படவில்லை; அதற்கு முன்பே ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக ஆராய் வதற்கு ஒரு குழு அமைத்திருப்பது மற்றும் ஆளும் அரசுத் தரப்பிலிருந்து அதற்கு ஆதரவாக தொடர்ந்து கருத்துக்களை பரப்புவது என்பது, இத்திட்டத்தை செயல்படுத்தும் அரசின் நோக்கத்தையே பிரதிபலிக்கிறது. இந்தியா போன்ற நாட்டில் இத்திட்டம் நடைமுறை சாத்தியமில்லாதது” என்று கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இந்திய நாட்டில் அனைத்து மாநிலங்களிலுமே ஒரு தனிப்பட்ட கட்சி மிகப்பெரும் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று ஆட்சிக்கு வருவது என்பது கிட்டத்தட்ட பழைய கதையாகிவிட்டது. இந்த நிலையில், தேர்தலின் போது தொங்கு நாடாளுமன்றம், தொங்கு சட்டமன்றம் அமைந்தாலோ அல்லது ஒரு தனிக்கட்சி பெரும்பான்மை பெற முடியாமல் போனாலோ, இவர்கள் சொல்லும் திட்டத்தின்படி மிகப்பெரிய பிரச்சினைகளும் குழப்பங்களும் ஏற்படும்.

ஒரு கட்சி, கொள்கை பிரச்சினை காரணமாகவோ அல்லது இதர காரணங்களுக்கோ அரசாங்கத்திற்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெற்றுவிட்டால், அதற்கு பிறகு அடுத்த தேர்தல் நடைபெறும் வரை, எந்தக் கூட்டணியிலும் இணைய முடியாமல் அல்லது தங்களது கொள் கைக்கு பொருத்தமான அணி சேர்க்கையை மேற்கொள்ள முடியா மல் தனித்தே நிற்க வேண்டிய நிலை ஏற்படும்.

சில தருணங்களில் ஆதரவளிக்கும் கட்சி வாபஸ்பெறும்நிலையில், ஆட்சிக்கவிழுமானால் அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்படுமா அல்லது பெரும்பான்மை இழந்த அரசாங்கமே அடுத்த தேர்தல் வரை அதிகாரத்தில் நீடிக்குமா என்ற கேள்விகள் எல்லாம் எழுகின்றன.

ஜனநாயகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் அதிகாரத்தை கையில் வைத்திருக்க முடியும்.

ஆனால் மேலே குறிப்பிட்டது போன்ற சூழல் ஏற்படும்பட்சத்தில், அடுத்த தேர்தலுக்கான காலம் வரை காத்திருங்கள் என்று கூறி மத்தியில் ஆளும் கட்சியே மாநிலத்தின் அதி காரத்தை குடியரசுத் தலைவர் ஆட்சி மூலமாக தனது கைகளில் எடுத்துக் கொள்ளும் மிகப் பெரும் ஆபத்துக்கள் அடங்கியுள்ளன. ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ என்பது தேர்தல் செலவினங்களை குறைப்பதற்காக முன்வைக்கப்படுகிறது என்ற ஒன்றிய அரசின் வாதம் நிராகரிக்கப்பட வேண்டியது ஆகும்.

இவ்வாறு சீத்தாராம் யெச்சூரி கூறினார்.

இதைத்தொடர்ந்து அவர் வெளி யிட்ட டுவிட்டர் பதிவில், “நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றங்களில் ஒரு அரசு தனது பெரும்பான்மையை இழந்துவிட்டது, ஆட்சியில் தொடர்வது என்பது சட்டவிரோதமானது. அதேபோல, அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சியை அமலாக்கி, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை பெற்றிருப்பதற்கான மக்களின் உரிமையை மறுப்பது என்பது ஜனநாயக விரோதமானது” என்று குறிப்பிட்டுள்ளார்.




வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்த அவசர செயற்குழுக் கூட்டத்தில் கழக பொதுச் செயலாளரும் நீர்பாசனத்துறை அமைச்சருமான துரைமுருகன் பேசினார். அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ,அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாவட்ட பொருளாளர் நரசிம்மன், மாநகர தி.மு.க செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய், ஞானசேகரன், குடியாத்தம் அமலு எம்.எல்.ஏ., விஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில் குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மற்றும் கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, பகுதி கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# பூமிக்கு வந்த பொன்மழையே.. நீ வாழி!

டாக்டர்
எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.
மேனாள் ஒன்றிய இணை அமைச்சர்





அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வம் என்றாள்
அமிழ்தச்சொல் ஔவை.

எழுத்தறிவித்தவன்
இறைவன் என்றான்
நறுந்தொகைப் பாண்டியன்.

ஈன்ற தாயும்
ஆன்ற தந்தையும்
அறிவூட்டும் ஆசானும்
இறைவனுக்குச் சமம்
என்பதைத் தாண்டி
முறைசெய்து மக்களைக் காப்பாற்றும்
நல்லாட்சித் தலைவன்
இறைவனுக்கு நிகராவான்
என்னும் இலக்கியச் சட்டத்தை
இவர்களுக்கு முன்பே இயற்றினான்
வான்புகழ் வள்ளுவன்.

அவ்வண்ணம் தெளிவித்த
அறிஞர் மொழிவழியில் நின்று
கலைஞர் விழிவழியில் சென்று
குறைகாண முடியாமல்
முறைசெய்து

உரைசெய்த வண்ணம்
உழைக்கும் மக்களின்
உணர்வுகளை நிறைசெய்து

கறைசெய்த நெஞ்சோடு
கர்ஜித்த எதிரிகளை
வாதங்களின் மூலம்
வதம்செய்து

துறைதோறும் துறைதோறும்
தொண்டுகளை ஓயாமல்
நிதம்செய்து

மாபெரும் மக்கள் தலைவராய்த்
தக்கார் போற்றத்
தழங்குகிறார் நம்
தங்கத் தளபதி!

சாமான்ய மக்களின்
சித்தவோட்டத்தையும்
ரத்தவோட்டத்தையும்
அணுக்கமாய் இருந்து
நுணுக்கமாய் அறிந்து
அற்புதத்தின் மறுபெயராய்
அரசாட்சி நடத்திவரும்
அவரைக் காண்பவர்கள்

‘ஏழைகளைக் காக்கவந்த
இவரெங்கள் குலசாமி’ என்று
வாய்மணக்க வாழ்த்துகிற
வார்த்தைகளின் பேரொலி
வானொலியாய்ப் பரவி
இமயத்தில் மோதி
எதிரொலியாய்க் கேட்கிறது
எங்கெங்கும்!

தனக்குநிகர் தானலாத ஒரு
தலைவருக்குத்
தனயனாய்ப் பிறந்து
தமிழனாய் வளர்ந்து
தகைசால் தலைவனாய் நிமிர்ந்து
தமிழகத்தின் முதல்வராய் உயர்ந்து

ஏழை எளிய மாந்தரின்
இதயக் கோயிலில்
இறைவனாய் வீற்றிருக்கும்நம்
இனிய தளபதியின்
எழிற்கோலம் காணுகையில்..

வள்ளுவர் வகுத்த
வரையறைக்கு வண்ணமூட்டுகிற
வனப்பியல் தலைவராய்அவர்
வானளந்து நிற்பதை உணரமுடிகிறது.

பூமியை நனைக்கும்
புதுமழையாய்ப்
புறப்பட்டு வருகின்றன
அவருடைய
திட்டங்கள் ஒவ்வொன்றும்!

ஈராண்டுக் காலத்தில்
இயற்கை ஏற்படுத்திய
இடர்ப்பாடுகள் ஒருபுறம்
வறண்டு கிடந்த நிதிநிலை
விளைவித்த
வாட்டம் ஒருபுறம் என,
சவால்களைச் சந்தித்து
சறுக்குமரம் ஏறும்
போராளியாய் மாறி
அவர்புரிந்துவரும் வித்தகங்கள்தான்
எத்தனை எத்தனை!

ஆட்சிப் பொறுப்பேற்றதும்
அவர் அறிவித்த
‘விடியல் பயணத்தின்’
வெளிச்சக் கோலத்தில்
மாதர் அகமெல்லாம்
மதிமுகமாய் மாறிற்று.

படிக்கப் பயணிப்போர்
பணியாற்றச் சென்றிடுவோர்

வேர்வையிலே குளித்து
வினையாற்றப் போய்வருவோர்
இல்லறக் கடமைகளை
இயற்றப் புறஞ்செல்வோர்

அனைவருக்கும் வரமாக அவரளித்த
விடியல் பயணமெனும்
விஞ்ஞானச் செயல்திட்டம்,
வஞ்சியர் குலத்தின்
வந்தனைத் தெய்வமாய்அவரை
வடிவமைத்திருக்கிறது!

பூமழை பெய்து கூடவே
பொன் மழையும் பெய்தாற்போல்
புத்துலகச் சிற்பி தளபதியின்
‘புதுமைப் பெண்’ திட்டம்

தமிழ்நாட்டு வரலாற்றுத்
தடத்தில்
மற்றுமொரு மைல்கல்லாய்
மாண்புகளைச் சூடி
மணம்வீசி நிற்கிறது.

மண்ணுக்குக் குடைபிடிக்கும்
மனித நிழலாய்
மகத்துவம் படைத்துவரும் நம்
மகத்தான தளபதி
பெண்ணுக்குக் குடைபிடிக்கும்
பேராட்சி தந்து
பெரியாரின் கனவு தேசத்தைக்
காட்சிப் படுத்திக் கொண்டிருக்கிறார்.

மைவைத்தக் கண்களில்
தீவைத்துக் கொண்டு
தெருவிலே இறங்குங்கள்!
இனிமேல்
திராவிடத் திக்குகளின்
புதிய புத்திரிகள் நீங்கள்! என்று
புதுமைப் பெண்களைப்
புத்தெழுச்சி கொள்ள
வைத்திருக்கிறார் நம்
வைகறைத் தளபதி.

வளையல் வட்டத்தை
விட்டுத் தாண்டுங்கள்!
உலகின் திசைகள்
ஒவ்வொன்றையும் தீண்டுங்கள்!

வளையலை நிமிர்த்தி
வாள்செய்து வைத்து
வஞ்சிக் கோட்டைகளை
நிர்மாணியுங்கள் என்று,

வலிமை நிறைந்த பெண்ணுலகத்துக்கு
வரவேற்புப் பத்திரம்
வாசித்துக் கொண்டிருக்கிறார்நம்
வசந்த தேசத்தின்
வசீகரத் தலைவர் தளபதி!

அன்னமூட்டும் அன்னையர் குலத்துக்கு
‘ஆகாயம் தொடுவோம்’ என்ற
எண்ணமூட்ட வந்த
இலட்சியவாதியாய்
எழுந்து நிற்கிறார்
ஏனைத் தலைவர்கள்
எல்லோரும் கொண்டாடும்
தானைத்தலைவர் நம் தளபதி!

இவர் நம்
கண்ணுக்கு இமையா?
கற்பனைக்கும் எட்டாத
காப்பியத்தின் விதையா?
கலைஞரெனும் கருத்தியலுக்குக்
கவின்சேர்க்க வந்த கவியா? நமைக்
கரைசேர்க்க வந்த கதியா? இல்லை
கடலையே அமுதாக்கும் நதியா?
என்று,
கண்ணுறுவோர் எல்லாம்

கண்ணேறு படுமாறு
கழறுகின்ற சொற்கள்
காலத்தின் நெற்றியில்
பதிவாகி விட்ட
கல்வெட்டுகளாய் ஒளிர்கின்றன.

தான்முதல்வன் ஆனதுமே
தன்னை வியக்காமல்
‘நான்முதல்வன்’ எனச்சொல்ல
நாட்டிலுள்ள இளையோரை
அன்புடனே பணிகொண்ட நம்
அறிவூக்கத் தலைவரின்
அழகுக்கு அழகு செய்யும்
மற்றுமொரு
அறிவாலயச் சட்டம்தான்

அண்மையில் மலர்ந்த
அருமையும் பெருமையும் மிகுந்த
முதலமைச்சரின்
காலை உணவுத் திட்டம்!

தீர்க்கமான அறிவு
திரண்டெழுந்த அன்பு
தேர்ந்திசைந்த அறம் மற்றும்
தேவை மிக்க பண்புகளின்
தெளிவாக விளங்குவதே
திறன்மிகு ஆட்சி என்பர்
தெய்வத் தமிழ் நூலார்.

அந்த இலக்கணத்தின் சிகரத்தில்
ஏறி நின்று
இளநகை புரிகிறார்நம்
இனமானத் தளபதி!
பசித்துக் கிடப்பவனைப்
பார்க்கப் பொறாதவன்
புண்ணிய மூர்த்தி
என்றான் பாரதி.

பசியென வருவோர்க்குப்
புசியெனத் தருவோரைப்
பசிப்பிணி மருத்துவர் என்றனர்
பைந்தமிழ்ப் புலவோர்கள்!

அற்றார் அழிபசி தீர்க்க
அமுத சுரபியோடு
அலைந்தாள் மணிமேகலை!

இரைப்பையைக் குளிர்வித்து
இதயத்தோடு பேசுங்கள் என்றார்
வீரத் துறவி விவேகானந்தர்!

இசுலாத்தின் நெறிகளில்
இன்றியமையாதது
பசித்தவர்களுக்கு உணவளிப்பது
என்றார்
நாயகத் திருமேனி.

பசிநெருப்பை அவிக்க
அடுப்பு நெருப்பை மூட்டினார்
அருட்பிரகாச வள்ளலார்.

ஆகா...! இந்த
அருளறங்கள் அனைத்தையும்
அப்படியே உள்வாங்கி
பெரிதினும் பெரிதான
பேரறம் ஒன்றைப்
பிரகடனம் செய்திருக்கிறார் நம்
பீடுடைய பெருந்தலைவர்
தளபதியார் அவர்கள்!

இவர்
தாயோ தந்தையோ

தனிப்பெருந் தெய்வமோ
மாயமோ, இந்த
மாநிலத்தின் பாக்கியமோ
தேடாமலே கிடைத்த
தென்னகத்தின் அதிசயமோ
வாராமல் வந்துதித்த
வரலாற்றுப் பரவசமோ! என்று

அன்றாடம் தாய்மார்கள்
அங்கங்கே பெரியோர்கள்
நின்றாடிப் பேசுவதை
நேர்காணல் செய்தால்..

ஒன்றல்ல இரண்டல்ல
ஓராயிரம் மணித்துளிகள்
சென்றேகும்; தளபதியின்
சித்திரத்தைச் சுவைப்பதற்கு!

காலை உணவு
கண்டிப்பாய்ச் சாப்பிட வேண்டும்
என்கிறது மருத்துவம்.
ஊட்டச் சத்து குறைபாடு
உள்வாங்கும் ஆற்றலை
ஊக்குவிக்காது என்றும்
உரைக்கிறது அறிவியல்.

காலை எழுந்து
பசியைச் சுமந்து
பிற்பகல் உணவு வரை
பட்டினி கிடந்து
வாடும் குழந்தைகள்
வாட்டம் அறிந்து
போட வேண்டும்
உணவெனத் துணிந்து
போட்ட திட்டத்தால்
புகழுலகத்தின் உச்சிக்கே
போய்விட்டார் நம் தளபதி!

“பள்ளிக்குச் சென்றதும் உணவு பின்
பாடம் படிக்கின்ற கனவு!
துள்ளித் திரியும் பல நிலவுஅதைத்
தூக்கி விளையாடிக் குலவு”
என்று

பூபாளம் இசைக்கும்
புதிய பாரதிகள்
பள்ளித் தலங்களைப்

பாடத் தொடங்கிவிட்டார்கள்
இப்போது!

பொன்னின் முன்னொளிரும்
பொன்னாகப் பூத்து
புதுப் பொலிவு பெற்று
புதுச்சாயல் உற்று
பொன்மலை ஒன்று
புகழ்கொண்டு நடந்தாற்போல்
பெருமிதப் பெருநடையில்
பேருலா வருகிறார் நம்
பிரியத்துக்குரிய தளபதி!

பதினேழு லட்சம்
பாலகர்கள் வயிற்றில்
பால்வார்த்த பரிவோடு
பாச உணர்வோடு

அறிவுலக சாம்ராஜ்யம்
அமைத்த நெகிழ்வோடு
அண்ணா கலைஞரின்
ஆசிபெற்ற மகிழ்வோடு

இனிமேல் தமிழ்நாடு
‘இளைஞர்களின் ஆட்சியில்
விளையாடும்’ என்னும்
வெற்றித் தினவோடு
பூரித்து நிற்கிறார் நம்
பொன்மனத் தளபதி!

‘இன்று என் வாழ்வில்
ஓர் பொன்னாள்’ என்று
அவர் புகன்ற வார்த்தைகளின்
ஆழம் காண்பது அவ்வளவு எளிதன்று!

வேழம் நிகர்த்த
வீரத் தமிழ்க்குலத்தின்
ஆரம் புனைந்த
ஆற்றல் மறவராய்
அவதாரம் எடுத்திருக்கும்
ஆடவர் திலகம் நம்
அன்புத் தலைவர் தளபதி,

தொட்டார் மாணவர்கள்
தூய இதயத்தை! பலர்
காலை உணவின்றி
வருந்துயர் கேட்டுப்
பட்டார் அதுவரை
படாத துயரத்தை!
கெட்டார் இவரென்றால்
நாடு கெடுமென்று
விட்டார் அறிவிப்பை!

விண்ணகமே கீழிறங்கி
விட்டாற் போல
‘உதய சூரியன்
உதிக்கின்ற வேளையில்
அடுப்புச் சூரியனை
ஆரம்பப் பள்ளிகளில்
ஏற்றுங்கள்’ என்று
எழுச்சிக் கட்டளை
இட்டார் தளபதியார்!

‘ஆகா என்று எழுந்ததுபார்
யுகப்புரட்சி’ என்று
உணர்ச்சிப் படையெடுத்து
உலகமே தமிழ்நாட்டை
உற்றுப் பார்க்கிறது
இப்போது!

தளபதியைத்
தொட்டுப் பார்க்க நினைத்த
தூரத்துப் பகைப்புலமே
கைகட்டிப் பார்த்துக்
களைத்துப் போய் நிற்கிறது
தற்போது!

அண்டை மாநிலங்கள்
அனைத்தும் மலைத்துப்போய்நம்
தளபதியின் மாநிலத்தை
தாகவிடாய் தீர்க்கும்
தண்ணீர்ப் பந்தலாய்க் கண்டு,
உணர்ச்சிப் பெருக்கில்
உறைந்துபோய் நிற்கின்றன!

பால் நினைந்தூட்டும்
பாசத் தாய்மார்கள்
தளபதியை வாழ்த்தித்
தழைக்கிறார்கள் நித்தம்!

மயக்கு மொழிபேசும்
மழலைக் குழந்தைகள்
தளபதிக்கு அள்ளித்
தருகிறார்கள் முத்தம்!


நம் தங்கத் தளபதி
தமிழ்நாட்டில் நடத்துவது
ஜனங்களைக் காப்பாற்றும்
ஜனநாயக யுத்தம்!
அறத்தின் போர்க் குரல்
ஆகாயம் தொடும்போது
அடங்கிப் போய்விடும்
ஆகாத சத்தம்!

ஆண்மைக்கு அரசாகி
அறிவுலக முரசாகி
அரசியல் மாற்றங்கள்
அனைத்துக்கும் சிரசாகி
வீறுநடை போடும்
வீரத் தளபதியின்
வெற்றிநடை தொடரட்டும்!

எங்கும் தமிழ்முத்திரை
எதிலும் திராவிட முத்திரை என்று
சங்கநாதம் செய்யும்
சந்தனச் சிந்தனைகளின்
சங்கமம் வெல்லட்டும்!

நகர்த்தி வைக்க முடியாத
நங்கூரச் சாதனைகளின்
கொள்ளிடமாய்த் தமிழ்நாடு
கொண்டாட்டம் காணட்டும்!

வான்கவிந்த வையகமே
வாழ்த்திசைக்க வாழ்கின்ற
வள்ளல் தளபதியார்
வாகைப்பூ சூடுவதே
வழக்கமாய்க் கொள்ளட்டும்!
அவர்
வைக்கின்ற அடிதோறும்
வாசமலர் பூக்கட்டும்!



# இளைஞர்களே இயக்கத்தின் ஈட்டி முனைகள்..!

*1949-ஆம் ஆண்டு, செப்டம்பர் 17-ஆம் தேதி, சென்னையில் இடைவிடாது கொட்டிக் கொண்டிருந்தது மழை. வடசென்னையில் ‘ராபின்சன் பூங்கா’ வில் கொட்டும் மழையிலும் மாபெரும் அறிவிப்புக்குக் காத்திருக்கிறது பெரும் இளைஞர் பட்டாளம். அவர்களுக்கெல்லாம் அப்போது வயது சற்றேறக்குறைய 25 முதல் 30-க்குள்தான் இருக்கும்.*

*தமிழ்நாட்டு வரலாற்றில் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டங்களுடன் உதயமான அந்த அரசியல் இயக்கத்தை, உலகுக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறார் அவர்களின் தலைமைப் பொறுப்பேற்ற அண்ணன். அவருக்கு அப்போது வயது 40.*

*சமூகநீதியின் திசைவழியை உரக்கச் சொன்ன, அந்த அண்ணன் பேரறிஞர் அண்ணா. அவரது தம்பிகள், கலைஞர் உள்ளிட்ட கழக முன்னோடிகள்.*

*கழகத்தின் தொடக்கக் கால வரலாறு இளைஞர்களிடமிருந்து எழுதப்பட்டதுதான். கழகத்தினரே மறந்த வரலாறும் ஒன்று உண்டு. கழகத்தின் தொடக்கவிழாக் கூட்டம் கோலாகலமாக சென்னையில் நடைபெற்றதென்றாலும், அதற்கு அடுத்த மாதம் கழக அமைப்புகளின் தொடக்க விழா பொதுக்கூட்டங்கள் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெற்றது. நெல்லையில் 25 வயதேயான இளைஞராகக் கழகக் கொடியேற்றியவர் கலைஞர்.*

## அண்ணா அமைத்த அடித்தளம்

*நாம் சமகாலத்தில் கொண்டுள்ள அரசியல் எழுச்சி, ஆட்சி அதிகாரத்தின் மூலம் உருவாக்கிய சாதனைகள், உலகுக்கே சமூகநீதியை அறிவிக்கும் உத்வேகம் எல்லாம் அன்றைய இளைஞர்கள் உருவாக்கிய பாதை என்றுதான் சொல்ல வேண்டும்.*

*இன்று நமது அத்தனை பெருமைகளுக்கும் காரணம், அன்றைய இளைஞர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு அடித்தளம் அமைத்ததுதான்.*

*அந்த வரலாற்றில் பேரறிஞர் அண்ணாவுக்குப் பின், இளைஞர்கள் மீது அதிக அக்கறையும் ஆளுமையும் செலுத்தியவர் கலைஞர்தான்.*

*இளைஞர்கள் இன உணர்வு பெற வேண்டுமென அவர் 13 வயதில் எழுதிய ‘செல்வ சந்திரா’ புதினத்திலேயே குறிப்பிட்டவர் கலைஞர். அண்ணாவுக்கு அவரை அறிமுகப்படுத்திய ‘இளமைப்பலி’ இளையோருக்கு எழுதப்பட்டதுதான். ‘லட்சியத்துக்காக இளமையைப் பலி கொடுக்கவும் இதோ தயார் என எழுந்த இளைஞர் கூட்டத்தில் ஒருவன்’ எனத் தன்னைக் குறிப்பிட்டுக் கொண்டவர் கலைஞர்.*

## இளைஞர்களுக்குப் பாதை!

*இளைஞர்கள் எந்த அளவுக்குத் தயாராக வேண்டும் என்பதற்கு கழக வரலாற்றில், ஒரு சம்பவத்தை உதாரணமாகக் காட்ட முடியும்.*

*1966-ஆம் ஆண்டு, மாணவர் அணியின் சார்பில், தஞ்சையில் ஒரு மாநாடு. மேடையில் கழகத்தின் மூத்த தலைவர்கள் அமர்ந்திருக்கின்றனர். அதைப் பார்த்த அண்ணா, கழகத்தின் மூத்த தலைவர்களை எல்லாம் அழைத்து மேடைக்கு எதிரே அமர்ந்து கொள்ளுங்கள் என்கிறார். ‘இது மாணவர்கள் நடத்தும் மாநாடு, ஆகவே அவர்களின் உரையைக் கேட்பதற்காக நான் வந்துள்ளேன். மூத்த தலைவர்கள் பேச வேண்டாம்’ என்றும் கட்டளையிட்டார். ‘நாற்றங்கால் வளமாக இருந்தால்தானே பயிரும் செழிப்பாக வளர்ந்திட முடியும்’ என இந்த நிகழ்வை வர்ணிப்பார் கலைஞர்.*

*அதே வேட்கையை கலைஞரிடமும் பார்க்க முடியும். திராவிட இனத்தின் கொள்கைகளும் கோட்பாடுகளும் இன்னும் நூறு ஆண்டுகளுக்கு வளர்ந்து செல்ல வேண்டும் எனச் சோர்வில்லாது உழைத்தவர் அவர். அதனால்தான், கட்சிப் பொறுப்புகளிலும் கழகப் பொறுப்புகளிலும் 50:50 என்கிற விகிதத்தில் இளைஞர்களை அமர்த்தினார்.*

*இந்த உத்தியை அவர் வாய்ப்புகள் அளிப்பதிலும் தவறவிட்டதில்லை. பல நேரங்களில் தனது மனக் கண்களில் இருந்து, கழகத்தின் இளைஞர் அணிக்கு எனப் பல அறைகூவல்களை விடுத்திருக்கிறார் கலைஞர்.*

*இளைஞர் அணி தொடங்கப்பட்ட பின்னர் முதன்முதலில் 2007-ஆம் ஆண்டு நெல்லையில் மாநாடு நடைபெற்றது. இன்றைய முதலமைச்சர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக அந்த மாநாட்டை வழி நடத்தினார். கலைஞர் இளைஞர் அணியைத் தயார்படுத்துவது மட்டுமல்ல, கழகத்தின் கரத்தை வலுப்படுத்த இளைஞர்களை உரப்படுத்தும் பணிகளையும் செய்தார்.*

*டிசம்பர் 15, 16 நாட்களில் இளைஞர் அணியின் மாநாடு நடத்த தலைமைக் கழகத்திடம் அனுமதி பெற்றுள்ளார் என கழகத்தின் அமைப்பு ஜனநாயகத்தைச் சுட்டிக்காட்டவும் தவறவில்லை.*

## இளைஞர்களுக்கு...

*நாம் யார்? நமது இனம் யாது? நமது மொழி எது? மொழிக்காகச் சிந்திய ரத்தம், அடக்குமுறைகள், உயிர்ப்பலிகள் எத்தனை? அவற்றையெல்லாம் நினைத்து, அந்தத் தியாகத்தை நினைத்து உள்ளம் உறுதி பெற வேண்டாமா எனக் கேட்டார் கலைஞர். கழகம் பவளவிழா ஆண்டிலும் கலைஞரின் நூற்றாண்டிலும் நிற்கும் கழகத்தின் தூணாக நிற்போர், இந்த வரலாற்றை மீண்டும் உருவாக்க வேண்டிய கட்டத்தில் நிற்கிறோம்.*

*இளைஞர்கள் பொறுப்பேற்க வேண்டிய தருணத்தை கலைஞரின் குரலிலேயே அழைப்பாக விடுக்கிறார் நமது முதலமைச்சர்.*

*இளைஞர் அணியை உருவாக்கி, தாய்க் கழகத்துக்குப் பெருமை சேர்த்தவர், “கலைஞர் நூற்றாண்டில் உள்ளோம் நமக்கான கழகப் பணிகள் காத்திருக்கின்றன. உண்மையான புதிய இந்தியாவை விடியச் செய்யும் பெரும் பொறுப்பினை கழகம் ஏற்றுள்ளது. தாய்க் கழகத்தின் கரங்களை வலுப்படுத்தும் இளைஞர்கள் காலத்தின் தேவை” என்கிறார்.*

*பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘இளைஞர்கள் ஒரு இயக்கத்தின் ஈட்டி முனைகள்’ எனக் கூறுவார். ஆனால், கலைஞரோ, ‘இளைஞர்கள் ஈட்டி முனைகளாக இருப்பதோடு, இயக்கத்துக்கு ஒவ்வொருவரும் ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டிடும் முனைகளாக இருக்க வேண்டும்’ என்று கூறுவார்.*

*“வாழ்வின் பயன் என்பது நானும் என் குடும்பமும் மாத்திரம் வளம்பெற்று வாழ்வது அல்ல; ஒட்டுமொத்த சமுதாயமும் நல்வாழ்வு பெறுவதுதான் என்கிற சிந்தனையை உருவாக்கிக் கொள்வதுதான்.*

*அதற்கென நேர்மையெனும் நீர்ப்பாய்ச்சி, உறுதியெனும் உரமிட்டு, பண்பு எனும் பறம்படித்து, விவேகமெனும் விதை நட்டு, வாடாத பயிராக வளர்ந்து கொண்டிருப்பவன் நான், என கழகத்தின் கோடானகோடி தொண்டர்களுக்குத் தனது வாழ்க்கையைக் குறிப்பிட்டார்.*

*அந்தப் பயிர் வாடினால் நான் வாடுவேன், பயிர் வளம் செழித்தால் வலிவு கூடும், பொலிவு மிகுந்திடும்” என்பார். கலைஞர் என்கிற ஆயிரம் காலத்து பயிர் எப்போதும் செழித்து வளர இளையோர் அரசியல் பயில வேண்டும். வாழ்வின் பயன் என்ன என உணர வேண்டும். இந்தக் காலம் அதற்கான தேவைகளை உருவாக்கி வருகிறது.*

*‘இளையோர் அரசியல் எழுச்சி பெற , தீரர்களுக்கான அழைப்பு என வீர இளைஞர்காள்! உமை வேண்டுகிறேன்’ என 2007-ஆம் ஆண்டு அழைத்தார் கலைஞர். காற்றில் உயிர்பெற்று நிற்கும் கலைஞரின் குரல் கேளாத செவிகளிலும் கேட்கும்.*

## :ப்ளாஷ்பேக்



### மூன்று தலைமுறை!



அஜ்மல் கான்

**1985**-ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம், நெய்வேலிக்கு தலைவர் கலைஞர் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது இளைஞர் அணி பொறுப்பிலிருந்த என் தந்தை அ.அப்துல் காதர் ஜெய்லானி, 5 மாத குழந்தையாக இருந்த என்னை தலைவர் கலைஞர் கரங்களில் கொடுத்து அறிமுகம் செய்தார். நெய்வேலி நகரச் செயலாளர் ராமகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர் செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோருடன் என் தாத்தா அப்துல் ரஹீம் அவர்களும் உடனிருந்தார்கள். மூன்று தலைமுறையும் தலைவர் கலைஞருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் என்று என் அப்பா அடிக்கடி இப்புகைப்படத்தைக் காண்பிப்பார். இன்றைக்கு கழக உறுப்பினராக நானும் அந்தப் பணியைத் தொடர்வது மகிழ்ச்சி அளிக்கிறது.

**-மரு.அ.அஜ்மல் கான், மருத்துவர் அணி, நெய்வேலி, கடலூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் youthwing@dmk.in

### விடுதலைப் போரில் ‘அவர்களுக்கு’ என்ன பங்கு?






**த**மிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில், சென்னையில் கடந்த 2-ஆம் தேதி சனாதன ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பேச்சு, இந்தியா முழுவதும் சங்பரிவார் கூட்டத்தினரிடையே பதற்றத்தை ஏற்படுத்தி இருப்பதைப் பார்க்க முடிகிறது. அதைப் போலவே அந்த நிகழ்ச்சியில் அவர் வெளியிட்ட ‘இந்திய விடுதலைப் போரில் ஆர்.எஸ்.எஸ்’-இன் பங்கு என்கிற நூலும் பெரும் கவனம் பெற்றதுடன், அது தொடர்பாக வீடியோக்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

அந்த நூலில் முதற்பக்கத்தில் பிரிட்டிஷாரிடம் மன்னிப்புக் கேட்ட சாவர்க்கர் ஓவியமும், இரண்டாவது பக்கத்தில் காந்தியை கோட்சே கொன்ற ஓவியமும் உள்ளன. மூன்றாவது பக்கத்தில் இருந்து முழுவதும் காலி பக்கங்கள்தான். அதைப் பார்த்த அமைச்சர், மூன்றாவது பக்கத்தில் மூன்று பூஜ்ஜியங்களைப் போட்டு ஆர்.எஸ்.எஸ். பங்கினை அம்பலப்படுத்தினார். விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் எந்தப் பங்கும் வகிக்கவில்லை என்பதைப் பல பக்கங்களுக்கு எழுதுவது, பேசியதைவிட, அந்த ஒரு நவீன வடிவம் பார்வையாளர்களுக்கு உண்மையைக் கடத்திவிட்டது.

### கருவூலம்

### தன்னம்பிக்கைத் தலைவர்!

**1970-ஆம் ஆண்டு, புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் பங்கேற்றார் கலைஞர். பிரதமர் முன்னிலையில் மாநில சுயாட்சி குறித்துப் பேசிய அவர், ‘சேலம் இரும்பு உருக்கு ஆலை இடம் பெறாத நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இயலாது’ என கடுமையாகக் கூறினார். கலைஞரின் இந்த வாதம் குறித்து அப்போது எழுதிய ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ ஏடு, “அவர், துடிப்புடன், புதுத் திட்டங்களுடன் பெரிய குறிக்கோள்களுடன் தன்னம்பிக்கையுடன் செயல்படுகிறார்” என புகழ்ந்து எழுதியது.**

### திராவிட இயக்க இதழ்கள் - ‘சமநீதி’



**சோ**சலிஸ்ட் கட்சியின் தமிழ்நாட்டுத் தூண்களிலே ஒருவராகத் திகழ்ந்தவர் ஈரோடு மு.சின்னசாமி. முத்தமிழறிஞர் கலைஞர் மீது பற்றுக் கொண்டிருந்த அவர் தொடங்கிய இதழ்தான் ‘சமநீதி’. இது வார இதழாக வெளிவந்தது.

1964 - ஆம் ஆண்டு வாக்கில் வெளிவரத் தொடங்கியிருக்கிறது, இந்த இதழ். பிறகு, இந்த இதழை 1966-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். வாங்கி, சிறப்பாசிரியராக இருந்து நடத்தினார். அதில்தான் ‘என் காதலி’ என்ற தொடரையும் அவர் எழுதினார்.

இந்த இதழில், கவிஞர் தமிழ்ஒளி, கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் எழுதியிருக்கின்றனர். காசி ஆனந்தன் எழுதிய சிறுகதைகள் முதன்முதலில் இந்த இதழில்தான் வெளியாகின.

1967- ஆம் ஆண்டு ஜூன் 2 -ஆம் தேதியிட்ட இந்த இதழில், தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது அதிகாரிகளிடம் இருந்த மனநிலை பற்றி, அப்போது முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா சொன்ன அறிவுரை இது...

“நான் பதவி ஏற்றதும் சில போலீஸ் அதிகாரிகள் என்னிடம் வந்தார்கள். ‘நாங்கள் தேர்தல் நேரத்தில் நியாயமாகத்தான் நடக்க முயன்றோம்...” என்றார்கள்.

“நீங்கள் நிரந்தரமான அரசு ஊழியர்கள். நாங்கள் மக்கள் அனுமதிக்கிற வரையில் அமைச்சர்கள். இரண்டு பேருக்குமுள்ள தொடர்பைத் தெரிந்து வைத்திருக்கிறேன். ஒரு துளியும் கவலைப்படாமல் பணியாற்றுங்கள் என்றும் கூறினேன். எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு நாங்கள் நடந்து வருகிறோம், என்பதைத் தெரிவிக்கவே இதைக் கூறினேன். யாரையும் பழிவாங்கும் நோக்கம் எங்களுக்கில்லை.

முன்பு ஆட்சியிலிருந்தவர்களின் தூண்டுதலின் பேரில், ஒரு உயர் போலீஸ் அதிகாரி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, நமது நாவலர் நெடுஞ்செழியனிடம் தொலைபேசி மூலம், ‘என்ன... உங்கள் அண்ணாதுரை தற்கொலை செய்து கொண்டாராமே?’ என்று கேட்டார்.

நாவலர் நெடுஞ்செழியன் நெஞ்சு பதைபதைத்து ‘அப்படி ஒன்றுமில்லையே’ என்று பதில் கூறியிருக்கிறார்.

‘இல்லை... ஏதாவது ஆக்சிடென்ட் நடந்ததா? ஆள் போய்விட்டார் என்று கூறுகிறார்களே?’ என்று அந்த அதிகாரி கூறியிருக்கிறார்.


உடனே நாவலர், என்னை தொலைபேசியில் அழைத்து போலீஸ் அதிகாரி சொன்னதைச் சொன்னார்.

“அவர்கள் இப்படிக் கேட்பதில் திருப்தி அடைந்து கொள்ளட்டும்” என்றேன் நான்.

இப்போது அந்தப் போலீஸ் அதிகாரி இருக்கிறார். ஆனால், அவர் மீது ஈ உட்காருவதைக் கூட நான் அனுமதிக்க மாட்டேன்”. என அண்ணாவின் இந்த உரையாடலை பதிவு செய்துள்ளது ‘சமநீதி’ .

இந்த இதழ் எப்போது நின்றது என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆனால், கிடைக்கும் தகவல்படி 1980-களின் இறுதி வரை வந்திருக்கலாம்.

### திராவிடத்தால் வாழ்கிறோம் 231




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
ஆணையேற்று
கலைஞர் 100 1924 - 2023
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
நூற்றாண்டு திருவுருவச் சிலை திறப்பு விழா
மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி
மாபெரும் பொதுக்கூட்டம்
நாள் : 05.09.2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி
இடம் : விளையாட்டுத் திடல், வீராம்பட்டினம், அரியாங்குப்பம், புதுச்சேரி.
திருவுருவச் சிலையை திறந்து வைத்து சிறப்புரை :
மாண்புமிகு. ஆ.இராசா B.Sc., M.L., M.P. அவர்கள்
கழகத் துணைப் பொதுச்செயலாளர்
மாண்புமிகு. இரா.சிவா M.L.A. அவர்கள்
மாநில கழக அமைப்பாளர், புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
எஸ்.பி.சிவக்குமார்
மாநில அவைத் தலைவர்
சி.பி.திருநாவுக்கரசு
தலைமைச் செயற்குழு உறுப்பினர்
வி.அனிபால்கென்னடி M.L.A.
மாநில துணை அமைப்பாளர்
இரா.செந்தில்குமார் M.L.A.
மாநில பொருளாளர்
எல்.சம்பத் M.L.A.
மாநில இளைஞர் அணி அமைப்பாளர்
அனைவரையும் அன்புடன் அழைத்து மகிழும்...
ஜெ.வேலன்
முன்னாள் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்
கி.சங்கர் (எ) சிவசங்கரன்
மாநில அமைப்பாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை
Sri Thillai 94436 30951
அரியாங்குப்பம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. புதுச்சேரி


கலைஞர் 100 1924 - 2023
நாள்: 05.09.2023 செவ்வாய் கிழமை
நேரம்: மாலை 3.00 மணி
இடம் : இசக்கி மஹால் மைதானம் தென்காசி மாவட்டம்
தென்காசி மாவட்ட இளைஞரணி
செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே! வருக! வருக!!
மாண்புமிகு. K.K.S.S.R.ராமசந்திரன் அவர்கள்
தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்
திரு. தனுஷ் எம் குமார் அவர்கள்
தென்காசி பாராளுமன்ற உறுப்பினர்
திரு. வே.ஜெயபாலன் அவர்கள்
தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர்
திரு. ஈ.ராஜா M.L.A அவர்கள்
சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர்,வடக்கு மாவட்ட கழக செயலாளர்
திரு. G.P.ராஜா அவர்கள்
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்
திரு. T.R.கிருஷ்ணராஜா அவர்கள்
தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், பேரூராட்சி மன்ற உறுப்பினர் - குற்றாலம்
திரு. T.M.S.முகேஷ் அவர்கள்
வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்
தென்காசி மாவட்ட தி.மு.க.


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் ஆணையேற்று
கலைஞர் 100 1924 - 2023
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
நூற்றாண்டு திருவுருவச் சிலை திறப்பு விழா
மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி
மாபெரும் பொதுக்கூட்டம்
நாள் : 05.09.2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி
இடம் : விளையாட்டுத் திடல், வீராம்பட்டினம், அரியாங்குப்பம், புதுச்சேரி.
முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவச் சிலையை திறந்து வைத்து சிறப்புரை :
மாண்புமிகு. ஆ.இராசா B.Sc., M.L., M.P. அவர்கள்
கழகத் துணைப் பொதுச்செயலாளர்
மாண்புமிகு. இரா.சிவா M.L.A. அவர்கள்
மாநில கழக அமைப்பாளர், புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
எஸ்.பி.சிவக்குமார்
மாநில அவைத் தலைவர்
சி.பி.திருநாவுக்கரசு
தலைமைச் செயற்குழு உறுப்பினர்
வி.அனிபால்கென்னடி M.L.A.
மாநில துணை அமைப்பாளர்
இரா.செந்தில்குமார் M.L.A.
மாநில பொருளாளர்
எல்.சம்பத் M.L.A.
மாநில இளைஞர் அணி அமைப்பாளர்
ஏ.கே.குமார்
மாநில துணை அமைப்பாளர்
அ.தைரியநாதன்
மாநில துணை அமைப்பாளர்
பூ.சுப்புராயன்
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
அழைப்பின் மகிழ்வில்...
பா.செ.சக்திவேல்
தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்
நா.கோபாலகிருஷ்ணன்
தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்
வ.சீத்தாராமன்
தொகுதி கழக செயலாளர்
ஆ.ஜெ.அருண்குமார்
மாநில பொறியாளர் அணி அமைப்பாளர்
பா.செ.தினகரராசு
மாநில பிரதிநிதி
ஜெ.க.அரசு
தொகுதி இளைஞர் அணி அமைப்பாளர்
சு.முகுந்தன்
மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர்
Sri Thillai 94436 30951
அரியாங்குப்பம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. புதுச்சேரி



5-9-2023
தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும்
மாண்புமிகு
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே
வருக! வருக!!
அன்புடன்... வே.ஜெயபாலன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர்
S.M.ரஹீம் M.C
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
மு.நகர கழக செயலாளர்
மு.நகர்மன்ற தலைவர் செங்கோட்டை.
K.இராஜேஸ்வரன் B.A.,D-coop
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
AP.அருள் M.A.,M.Phil.,B.L.,
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
பாவூர்சத்திரம்
தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க




5-9-2023
தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
அன்புடன்...
க.சீனித்துரை
கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய தி.மு.க செயலாளர்
காவேரிசீனித்துரை
ஒன்றிய குழு தலைவர், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம்
கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய தி.மு.க




கலைஞர் 100 1924 - 2023
தென்காசி மாவட்டத்திற்கு வருகைதரும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை அன்புடன் வரவேற்கிறோம்...
5.09.2023
மாண்புமிகு.
K.K.S.S.R.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
உயர்திரு.
E.ராஜா சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர்
தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர்
A.அந்தோணிச்சாமி நகர செயலாளர்,
நகர்மன்ற துணைத்தலைவர், புளியங்குடி




தென்காசி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க


கலைஞர் 100 1924 - 2023
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
ஆணையேற்று
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
நூற்றாண்டு திருவுருவச் சிலை திறப்பு விழா
மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி
மாபெரும் பொதுக்கூட்டம்
நாள் : 05.09.2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி
இடம் : விளையாட்டுத் திடல், வீராம்பட்டினம், அரியாங்குப்பம், புதுச்சேரி.
திருவுருவச் சிலையை திறந்து வைத்து சிறப்புரை :
மாண்புமிகு. ஆ.இராசா B.Sc., M.L., M.P. அவர்கள்
கழகத் துணைப் பொதுச்செயலாளர்
மாண்புமிகு. இரா.சிவா M.L.A. அவர்கள்
மாநில கழக அமைப்பாளர், புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
எஸ்.பி.சிவக்குமார்
மாநில அவைத் தலைவர்
சி.பி.திருநாவுக்கரசு
தலைமைச் செயற்குழு உறுப்பினர்
வி.அனிபால்கென்னடி M.L.A.
மாநில துணை அமைப்பாளர்
இரா.செந்தில்குமார் M.L.A.
மாநில பொருளாளர்
எல்.சம்பத் M.L.A.
மாநில இளைஞர் அணி அமைப்பாளர்
அனைவரையும் அன்புடன் அழைத்து மகிழும்...
ஜெ.வேலன்
முன்னாள்
தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்
கி.சங்கர் (எ) சிவசங்கரன்
மாநில அமைப்பாளர்,
கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை
அரியாங்குப்பம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. புதுச்சேரி


கலைஞர் 100 1924 - 2023
நாள்:
05.09.2023
செவ்வாய் கிழமை
நேரம்:
மாலை 3.00 மணி
இடம் :
இசக்கி மஹால் மைதானம்
தென்காசி மாவட்டம்
தென்காசி மாவட்ட இளைஞரணி
செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே! வருக! வருக!!
மாண்புமிகு. K.K.S.S.R.ராமசந்திரன் அவர்கள்
தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்
திரு. தனுஷ் எம் குமார் அவர்கள்
தென்காசி பாராளுமன்ற உறுப்பினர்
திரு. வே.ஜெயபாலன் அவர்கள்
தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர்
திரு. ஈ.ராஜா M.L.A அவர்கள்
சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர்,வடக்கு மாவட்ட கழக செயலாளர்
திரு. G.P.ராஜா அவர்கள்
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்
திரு. T.R.கிருஷ்ணராஜா அவர்கள்
தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், பேரூராட்சி மன்ற உறுப்பினர் - குற்றாலம்
திரு. T.M.S.முகேஷ் அவர்கள்
வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்
தென்காசி மாவட்ட தி.மு.க.


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் ஆணையேற்று
கலைஞர் 100 1924 - 2023
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
நூற்றாண்டு திருவுருவச் சிலை திறப்பு விழா
மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி
மாபெரும் பொதுக்கூட்டம்
நாள் : 05.09.2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி
இடம் : விளையாட்டுத் திடல், வீராம்பட்டினம், அரியாங்குப்பம், புதுச்சேரி.
முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவச் சிலையை திறந்து வைத்து சிறப்புரை :
மாண்புமிகு. ஆ.இராசா B.Sc., M.L., M.P. அவர்கள்
கழகத் துணைப் பொதுச்செயலாளர்
மாண்புமிகு. இரா.சிவா M.L.A. அவர்கள்
மாநில கழக அமைப்பாளர், புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
எஸ்.பி.சிவக்குமார்
மாநில அவைத் தலைவர்
சி.பி.திருநாவுக்கரசு
தலைமைச் செயற்குழு உறுப்பினர்
வி.அனிபால்கென்னடி M.L.A.
மாநில துணை அமைப்பாளர்
இரா.செந்தில்குமார் M.L.A.
மாநில பொருளாளர்
எல்.சம்பத் M.L.A.
மாநில இளைஞர் அணி அமைப்பாளர்
ஏ.கே.குமார்
மாநில துணை அமைப்பாளர்
அ.தைரியநாதன்
மாநில துணை அமைப்பாளர்
பூ.சுப்புராயன்
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
அழைப்பின் மகிழ்வில்...
பா.செ.சக்திவேல்
தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்
நா.கோபாலகிருஷ்ணன்
தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்
வ.சீத்தாராமன்
தொகுதி கழக செயலாளர்
ஆ.ஜெ.அருண்குமார்
மாநில பொறியாளர் அணி அமைப்பாளர்
பா.செ.தினகரராசு
மாநில பிரதிநிதி
ஜெ.க.அரசு
தொகுதி இளைஞர் அணி அமைப்பாளர்
சு.முகுந்தன்
மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர்
அரியாங்குப்பம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. புதுச்சேரி


5-9-2023
தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும்
மாண்புமிகு
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின் அவர்களே
வருக! வருக!!
அன்புடன்... வே.ஜெயபாலன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர்
S.M.ரஹீம் M.C
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
K.இராஜேஸ்வரன் B.A.,D-coop
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
AP.அருள் M.A.,M.Phil.,B.L.,
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
பாவூர்சத்திரம்
தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க


5-9-2023
தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
அன்புடன்...
க.சீனித்துரை
கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய தி.மு.க செயலாளர்
காவேரிசீனித்துரை
ஒன்றிய குழு தலைவர், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம்
கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய தி.மு.க


கலைஞர் 100
1924 - 2023
தென்காசி மாவட்டத்திற்கு வருகைதரும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை அன்புடன் வரவேற்கிறோம்...
5.09.2023
மாண்புமிகு.
K.K.S.S.R.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
உயர்திரு.
E.ராஜா சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர்
தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர்
A.அந்தோணிச்சாமி நகர செயலாளர்,
நகர்மன்ற துணைத்தலைவர், புளியங்குடி


செப் 05,
ஒருங்கிணைந்த தென்காசி மாவட்ட
கழக இளைஞர்அணி செயல் வீரர் கூட்டத்திற்கும்,
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும்
நிகழ்ச்சிக்கு வருகை தரும்...
கழக இளைஞர்அணி செயலாளர்,
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வரவேற்று மகிழ்கிறோம்.
K.K.S.S.R. இராமச்சந்திரன்
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
மா. செல்லத்துரை
தலைமை செயற்குழு உறுப்பினர்
(தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் பொறுப்பாளர்)
தென்காசி மாவட்ட தி.மு.க.


5-9-2023
தென்காசி
மாவட்டத்திற்கு
வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக. வருக..
மகிழ்வோடு வரவேற்கும் : பொ.சிவபத்மநாதன் எம்.ஏ.பி.எல்.
முன்னாள் மாவட்ட கழக செயலாளர்
தென்காசி தெற்கு மாவட்டம்


தென்காசி தெற்கு - வடக்கு மாவட்ட தி.மு.க.
சார்பில்
இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம்
நாள் : 5.9.2023 செவ்வாய்க்கிழமை – இடம் : தென்காசி
தலைமையேற்று எழுச்சியுரை
கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்கள்
கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்
ARASU ARTS
தென்காசி தெற்கு - வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி


செப் 05,
ஒருங்கிணைந்த தென்காசி மாவட்ட
கழக இளைஞர்அணி செயல் வீரர் கூட்டத்திற்கும்,
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும்
நிகழ்ச்சிக்கு வருகை தரும்...
கழக இளைஞர்அணி செயலாளர்,
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வரவேற்று மகிழ்கிறோம்.
K.K.S.S.R. இராமச்சந்திரன்
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
மா. செல்லத்துரை
தலைமை செயற்குழு உறுப்பினர்
(தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் பொறுப்பாளர்)
தென்காசி மாவட்ட தி.மு.க.



5-9-2023
தென்காசி
மாவட்டத்திற்கு
வருகை தரும்
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக. வருக..
மகிழ்வோடு வரவேற்கும் : பொ.சிவபத்மநாதன் எம்.ஏ.பி.எல்.
முன்னாள் மாவட்ட கழக செயலாளர்
தென்காசி தெற்கு மாவட்டம்